www.tamilarangam.net

Raya

# தூண்டில்



RAYA
RUE DE COLOMBES
ASNIERES SUR -
SEINE , FRANCE

Wahid.91

ilische zeitschrift des Südasien Büro Nr. 38

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 21 ம் நூற்றாண்டுக்கு போவதற்கு 10 ஆண்டுகள் முன்பாக நம்முடைய தேசம் பற்றி

கவி

அ

1.

இதயத்தை இரும்பாக்கி,
மூளையைத் துவக்காக்கி,
நண்பனைப் பகைவனாக்கி
என்னிடம் திரும்பினான்
இராணுவ வீரனாய் என்முன் நின்றான்
என் மகன்.
ஊட்டி வளர்த்த அன்பும், நேசமும்
ஆழப் புதைய
ஆடித்தான் போனேன்.

நண்பனைச் சுட்டுவிட்டு
வீரம் பேசினான்.
'தியாகம்' பற்றி, ஆயுதம் பற்றி
நிறையவே பேசினான்.
இப்போது நான் மௌனமாய் இருந்தேன்.

மனிதர்கள் பற்றி, விடுதலை பற்றி
மறந்தே போனான்.
இப்போது நான்
தாயாக இருத்தல் முடியாது
என்று தோன்றுகிறது.

துரோகி என்று
என்னையே புதைப்பானோ
இந் நாள்?

2.

இச்சையின்றி
கைகளை அசைத்து,
கால்களை உதைந்து,
வீரிட்டபடி நீ மலர்கையில்
உன்னைப் பற்றிய அம்மாவின் கனவுகள்
எப்படி இருந்திருக்கும்?.....?

www.tamilarangam.net

இன்று எப்படியாயிற்று
பார்த்தாயா?

இது எம்மண்;
இறுதியில் உன்னை அவர்கள்
கொன்றுவிட்டனர்.
காரணம்... ?
காரணம் கேட்டுக்
காணாமற் போக யார்தான் தயார்?
வாழ்வதற்கான
உரிமை மறுக்கப்பட்டு
குருதியுறைந்த உடலுடன்
ஆழப் புதைந்தது
உனது உடல் மட்டுமல்ல
உனதும் எனதும்
எம் போன்ற பலரதும்
உணர்வுகளும் கூடத்தான்.
உனது கதவு தட்டப்பட்ட
அந்த இரவில் (இன்று இரவுக்கு மறுபெயர் கொடூரம்)
மனிதநேயமும், நம்பிக்கைகளும்கூட
ஆழப் புதைந்தன.
நீ காணாமற் போனாய்....

மீண்டும் ஒரு இரவு
உயிர்ப்படங்கி
சில்லிட்டது பூமி.
உனது வாய்
உனது கண்
மூடியது மண்.
இருள்.

மெல்லத் தயங்கியபடி
அசைகிறது உலகம்.
மௌனமாய்
இருண்டு கிடக்கிறது வானம்.

(பிரேத மறைந்த நிலம் கொண்டு வரும்)

www.tamilarangam.net

# கொழும்பில் சந்தித்த ஜனநாயகம்

எமது மண்ணிலிருந்து 86 களில் ஜனநாயகத்தார் தலைமறைவு ஆகிவிட்டார். அவரது நிறத்தை, உருவத்தை, செயற்பாட்டை நாமெல்லோரும் மறந்து நெடுநாளாகிவிட்டது. அவரைக் காணாது தவித்த நான் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கொழும்புக்கு வந்தேன்.

எனது நண்பர்கள் சொன்னார்கள் கொழும்பில் ஜனநாயகத்தார் உலாவுகிறார் என்று! ஆனால் நேரில் காணவில்லை. இடையிடையே அவர் சுவாசிக்கும் காற்று என்னில் படுவதை உணர்வேன்.

தற்செயலாக கடந்த மார்கழி 11ஆந் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை தெகிவளை ஜெயசிங்க மண்டபத்தில் நடந்த சர்வதேச மானுட உரிமைகள் தினத்திற்காக நடாத்தப்பட்ட "விதர்சனம்" நிகழ்ச்சியைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

என்ன அதிசயம்! எமது மண்ணிலேயே வாழமுடியாமல் தப்பிவந்த ஜனநாயகத்தார் எஸ்.ரி.எப், ஜே.வி.பி. கொலைக் கும்பல்களின் மத்தியில் உயிர் வாழ்கிறார். எனினும் ஒருவித பயத்துடன் நிற்பதை அவதானிக்கமுடிந்தது.

"நண்பரே நலமாக உள்ளீர்களா?" என்று கேட்டேன்.

"மயான அமைதி நிலவுகிறது. எனினும் ஒவ்வோர் நாளும் மரணபயத்துடன்தான் வாழ்கிறேன்" என்றார். "இங்கும் கூட என்னை அரச உளவாளிகள் பின்தொடர்கின்றனர்" எனப் பயம் கலந்த முகத்துடன் சொன்னார்.

பாவம், எத்தனை நாட்கள் இப்படி உயிர் வாழ்வதுஎன நான் மனதுக்குள் நினைத்தேன். ஆனால் ஜனநாயகத்தாரோ உறுதி தளரவில்லை.

"நான் வாழ்வதற்கான போராட்டத்தை கொழும்புவாழ் நண்பர்களுடன் நடாத்துகின்றேன். தேவைக்கேற்ப இடம்மாற்றிக் கொள்வேன்" என்றார்.

5 வருடங்களின் பின் அவரைக் கண்ட மகிழ்ச்சியில் "வடக்குக் கிழக்குப் பக்கம் வாருங்களேன்" எனக் கெஞ்சிக் கேட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான்கு நாட்களும் நிகழ்ச்சிகளைப் பார்த்தபின்பு பதில் சொல்கிறேன்" என்றார் ஜனநாயகத்தார்.

தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற்ற "விதர்சனம்" நிகழ்ச்சியில் தமிழ், சிங்கள, முஸ்லீம் கலைஞர்களின் ஒன்றிணைந்த செயற்பாடு முக்கியமானதும், போற்றுதற்குரியதுமாகும்.

சிற்ப, ஓவிய, புத்தகக்கண் காட்சியும், திரைப்படம் காட்டுதல், இசை நிகழ்வு, வீதி நாடகங்கள், மேடை நாடகங்கள் என்பனவும் விதர்சனத்தை வளம் படுத்தின.

இந் நிகழ்வுகள் யாவும் ஒட்டுமொத்தத்தில் இலங்கைவாழ் மக்களின் அவலங்களை சித்தரிப்பனவாயும், இழந்துபோன மனிதாம்சத்தை மீட்டு எடுப்பதற்கும், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்குமான கருத்துகளை தெளிவுபடுத்துவனவாயும் அமைந்தன.

இவற்றில் என்னை ஈர்த்து சிந்திக்கத் தூண்டியவை வீதிநாடகங்களும், மேடை நாடகங்களுமே. கருத்தியல் சார்ந்து கனிசமான வளர்ச்சிப் போக்கைப் பெற்றுள்ள இந் நாடகங்கள் அரசின் அடக்குமுறைகளுக்கும், அடிமைத்தனங்களுக்கும் எதிரான குரல்களாக ஒலித்தன. இந்நிகழ்வுகளில் ஜனநாயகத்தார் நடமாடுவதைப் பார்க்கமுடிந்தது.

வெவ்வேறுபட்ட சிங்கள நாடகக்குழுக்களின் 6 வீதிநாடகங்களும், 3 மேடை நாடகங்களும் நடைபெற்றன. ஆயினும் யாவற்றினதும் பிரதான செய்தி ஆளும் வர்க்கங்களின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் மக்களின் மாயைகளை அகற்றி சிந்திக்கத் தூண்டுவதாகும். இச் செய்தியினை சமூகத்தில் நடக்கும் அன்றாட நிகழ்வுப் போக்குகளினூடாகவும், குறியீடுகள் மூலமாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

உதாரணமாக ஒரு வீதி நாடகத்தைப் பார்ப்போம். இது நரகத்தைக் களமாகக் கொண்டது. மண்ணில் இருந்து மரணத்தைத் தழுவிவரும் சமூகத்தின் வெவ்வேறு பாத்திரங்கள் ஊடாக ஆளும் வர்க்கத்தினதும், அதன் அடிவருடிகளினதும் போலித்தனங்களை நெறியாளர் இனங்காட்டுகிறார்.

இயமதர்மராசா நரகத்திற்கு விஜயம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவரை வரவேற்பதற்கு ஏவலாளர்கள் அணிவகுப்பு பழக்குகின்றனர். இடம், வலம் என்பதற்குப் பதிலாக 'ஓலைக்கால்' 'சீலைகால்' என்னும் பதங்களைப் பயன்படுத்துகின்றனர். அதாவது இடம், வலம் கூட ஒழுங்காகத் தெரியாத சிறுவயதினர் இராணுவத்திற்குச் சேர்க்கப்படுவதைப் புலப்படுத்தும் நிகழ்வாக அமைகின்றது.

இயமதர்மராசா வரும்போது பாடலை இசைத்த வண்ணம் கம்பீரமாக 'போஸ்' கொடுத்தவாறு வருகிறார். இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன இவ்வளவு ஆரவாரத்துடன் வருகிறார் என ஏவலாளர்கள் கேட்க, அது ஒன்றும் இல்லை. ரூபவாகினிக்குப் போஸ் கொடுத்தேன் எனக் கூறுகிறார். இது அரசகட்டுப்பாட்டில் உள்ள தொலைதொடர்பு சாதனங்களின் சுயரூபத்தை வெளிக்கொண்டு வருவதற்கு கையாளப்பட்ட உத்தி முறையாகும்.

மண்ணிலிருந்து ஜே.வி.பி. அரச இராணுவம், எம்.பி.க்கள், புலி, போதைப் பிரியர்கள், நாட்டை ஆளும் அரசர் ஆகியோர் மரணத்தைத் தழுவி நரகத்திற்கு வருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் மண்ணில் செய்த சாகசங்களையே நரகத்திலும் செய்வதைக் காட்டுவதன் மூலம் இவர்களின் பிழையான பக்கங்களைச் சுட்டிக் காட்டுகிறார் நெறியாளர்.

சிவன்மகன்

ஈற்றில் இவர்களுக்கான குற்ற விசாரணை ஆரம்பமாகிறது. ஏவலாளர்கள் ஒவ்வொருவரது இலக்கங்களையும் அழைத்து அவர்களின் குற்றங்களைப் பட்டியல் படுத்துகின்றனர்.

முதலாவதாக ஜே.வி.பி உறுப்பினர் அழைக்கப்படுகிறார். இவரது குற்றங்கள் மக்களைக் கடையடைக்கத் தூண்டியமை, இடதுசாரிகள் பலரைக் கொலை செய்தமை, சுவரொட்டிகள் ஒட்டியமை. இவை யாவற்றையும் செய்யத் தூண்டியவர் யார் என இயமன் கேட்கத் தலைவர் எனப் பதில் சொல்லுகிறார் அவ்வுறுப்பினர். அவ்வாறாயின் தலைவரைக் கண்டாயா? என்று இயமன் கேட்க, ஆம் படத்தில் பார்த்தேன் என்கிறார். பாவம் இவனுக்கு மண்டையில் ஒன்றுமில்லையெனக் கூறிய இயமன் முழங்காலில் குந்தி இருக்கும்படி அவரைப் பணிக்கிறார்.


இரண்டாவதாக உறுமிக் கொண்டு புலி பாய்ந்துவருகிறது. இவரது குற்றம் பற்றி ஒரு வீடியோத் திரைப்படம் கொண்டுவந்திருப்பதாக ஏவலாளர்கள் கூறினார்கள். அதனைப் போட்டுப் பார்த்தால், புலிகள் தம்மவரையே கொலை செய்து அடாவடித்தனம் புரிவது காட்டப்படுகின்றது. இதனைப் பார்த்த இயமதர்மராசா, என்னடா அதிசயம்! இவர்கள் தங்களுக்குள்ளேயே கொன்று குவிக்கிறார்கள் எனக் கூறி புலியை முழங்காலில் இருத்தி, எலும்புக்கூட்டு மாலையை போட்டு, அதை எண்ணி நீ பாயும் இலக்கைக் குறி தவறாமல் சரியாக கணிப்பிடு என பணிக்கிறார்.

இறுதியாக நாட்டை ஆண்ட அரசர் வருகிறார் என ஏவலாளர்கள் கூற இயமன் அவசரமாக எழுந்து, அவனை இங்கு வரவிடாமல் பூலோகத்திலேயே நிறுத்துங்கள் எனக் கூச்சல்போடுகிறார். இவன் செய்த குற்றத்திற்கு என்ன தண்டனை கொடுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




லாம் என்று யோசித்து சட்டப் புத்தகங்களைப் புரட்டுகின்றனர் ஏவலாளர்கள். தேடிக் களைத்து இப் புத்தகத்திலேயே இவனுக்கு தண்டனை என்ன என எழுதப்படவில்லை எனக் கூறுகின்றனர். இவன் இங்கு வந்தால் நரகத்தையே பாழாக்கிவிடுவான் எனக்கூறி மண்ணுலகில் வைத்தே தண்டனை கொடுக்குமாறு பணிக்கின்றார் இயமன்.

இவை போன்றே தர்மசிறி பண்டாரநாயக்கவின் "ஏகாதிபதி" (ஏகாதிபத்தியம்), லின்டன் சேமகேயின் "பஞ்சாயுதம்", ரேகண பெரேராவின் "ருகிறு" (செஞ்சூரியன்) ஆகிய 3 மேடை நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

"ஏகாதிபதி" நாடகம் அரசு ஏகாதிபத்தியத்திற்கு துணைபோய் நாட்டின் வளங்களை தாரை வார்ப்பதையும், புரட்சிக்குழுவை அடக்குவதற்கு அந்நிய உதவியை நாடுவதையும் உலக திருச்சபை (பாதிரியார்–மூலம்) ஏகாதிபத்தியத்திற்கு துணைபோவதையும், ஈற்றில் புரட்சிக்குழு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் சித்தரிக்கின்றது.

"பஞ்சாயுதம்" சிறு வயதிலிருந்து வன்முறை எவ்வாறு மனிதரை ஆட்கொள்கின்றது, அது படிப்படியாக முனைப்புப்பெற்று உலகை எவ்வாறு பாதிக்கின்றது என்பதனை ஒரு மனிதரின் மனச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாட்சியினூடு தெளிவுபடுத்துகின்றது.

"முகிறு" இனவாதமாயைக்குள் அகப்பட்டு எவ்வாறு சிங்களச் சமூகம் தமிழ்ச் சமூகத்தை நசுக்குகிறது என்பதனை ஒரு சிங்களக் குடும்பம் எடுத்து வளர்த்த தமிழ் மகனுக்கு நடக்கும் அவலங்கள் மூலம் பிரதான செய்தியைச் சொல்கின்றது. அதாவது தமிழ்—சிங்கள உறவு என்பது கணவன்—மனைவிக்கு இடையிலான உறவு. தமிழ்க் கணவனை அழிப்பது சிங்களப் பெண்ணின் வாழ்வைக், கலாச்சாரத்தை அழிப்பதற்கு சமன் எனச் சுட்டிக் காட்டுகின்றது.

இங்கு நான் எடுத்துக்—கொண்ட கருத்தை மட்டும் தெளிவுபடுத்துவதற்காக நாடகங்களின் கருப்பொருளை மட்டுமே விடயத்திற்கு எடுத்துக் கொண்டேன். அவற்றின் அரங்கு சார்ந்த, வடிவம் சார்ந்த விமர்சனங்களை பின்பு ஒருமுறை பார்க்கலாம்.

இவற்றையெல்லாம் கண்டு பிரமித்துப்போன நானும், எனது சிங்கள நண்பரும் இச் சிங்களக் கலைஞர்களிடம் உங்கள் நாடக அமைப்புருவ வளர்ச்சிக்கு காரணம் என்ன என்று கேட்டோம். எமது கடின உழைப்பும், தியாகமும்தான் என்று அவர்கள் பதில் தந்தனர்.

எமது சொந்த உழைப்பின் மூலமும், முற்போக்கு எண்ணம் கொண்ட நண்பர்களின் உதவியின் மூலமும்தான் தொடர்ச்சியாக எமது நாடக இயக்கம் உயிர் வாழ்கிறது. எமது குழுவில் உள்ளவர்களில் பலர் அன்றாட உணவுக்கு, உறைவிடத்திற்கு கஷ்டப்படுகிறார்கள். ஆனாலும் நாம் பணத்திற்காகவோ, வியாபாரத்திற்—காகவோ நாடகம் போடுவதில்லை. எந்த ஏழையும் எமது நாடகத்தை பார்க்க வேண்டும். அதற்காகவே நாம் வீதி நாடகத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

74களில் இருந்து இன்று வரை 16 ஆண்டுகளாக கிராமங்கள் தோறும் வீதி நாடகங்களை அரங்கேற்றி, அதனூடாக இன்று தென்னிலங்கை பூராகவும் நாடக இயக்கங்களையும், கலைஞர்களையும் உருவாக்கிய வீதி

நாடகக்குழுவின் பிதாமகர் — தொடர்ந்து சொல்கிறார்:

70களின் ஆரம்பத்தில் கொழும்பை மத்தியப்படுத்தி அதன் எல்லைக்குள் மேல்நிலை மக்களின் தேவைகளையே திருப்திப்படுத்திய நாடகமரபை மீறி அடிநிலை மக்களுக்கான ஓர் நாடக மரபை கடின உழைப்பின் மத்தியில் உருவாக்கினேன்.

பிறிதொரு கலைக்குழுவை சார்ந்த நண்பர் சொல்கிறார்: அரச சார்புள்ள ஊடகங்களுக்கூடாக விதைக்கப்பட்ட இனவாத கலாச்சாரத்தை உடைத்து அதற்கு பிரதியீடான கலாச்சாரத்தை உருவாக்குவது (Altenative culture) உருவாக்குவதும், அதற்காக, அதற்காக தமி

www.tamilarangam.net

ழ்— சிங்கள—முஸ்லீம் கலைஞர்களை ஒன்றிணைப்பதும் இன்றுள்ள பிரதான கடமையாகும்.

இவ்வாறு நிகழ்ச்சிகளையும், கலைஞர்களையும் கண்டு பல்வேறு அனுபவங்களைத் திரட்டிக் கொண்டு ஜனநாயகத்தாரிடம் — சென்றேன்— அவரது பதிலைக் கேட்பதற்காக.

"உங்கள் 20வருட கால நாடக வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள். 70களில் தோற்றம்பெற்ற தனிப்பட்ட நெறியாளர்கள் சிலரும், கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவும், ரசிகர் அவைகளும், அதன்பின் நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்று கழகம் என்பனவும் தமிழ்நாடக வளர்ச்சியில் கணிசமான பங்கை வகித்தன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இக் குழுக்களதும், தனிநபர்களதும் நாடகம் சார்ந்த செயற்பாடு நடுத்தர வர்க்க மக்களைச் சார்ந்தே காணப்பட்டது. திருவிழா, ஐயா எலெக்ஷன் கேட்கிறார் போன்ற நாடகங்கள் கிராமங்கள் தோறும் மேடையேற்றப்பட்டன. ஆயினும் அவை ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாட்டு வடிவில் அமையாததினால் காலப்போக்கில் வலுவிழந்துவிட்டன.

80களுக்குப் பிற்பட்ட காலங்களில் தேசிய இனப்பிரச்சினை வலுப்பெற்றுக் காணப்படும் உங்கள் சமூகப் பிரக்ஞையுடன் கூடிய நாடகங்கள் எண்ணக் கூடிய சிலவே வெளிவந்தன. விடுதலை இயக்கங்கள் சிலவற்றின் நாடகங்களும் (பிரச்சார பாணியிலானவை) தனிப்பட்ட நெறியாளர்களின் நாடகங்களும் இவற்றில் குறிப்படத்தக்கன.

ஆனால் 85களில் தோற்றம்பெற்ற பல்கலைக்கழக் கலாச்சாரக் குழுவினர் கிராமங்கள் தோறும் 60இற்கு மேற்பட்ட மேடைகளில் "மண் சுமந்தமேனியர்"ஐ மேடை ஏற்றினர்.

இதுபோல் "மாய மான்" வீதி நாடகத்தைப் பல இடங்களில் மேடை ஏற்றினர். ஆனால் பின் அரசியல் அழுக்கங்களினால் சிதறிப்போய் ஆங்காங்கே தனி மரங்களாய் நிற்கின்றனர்.

86களின் பின் உங்கள் கலைஞர்களின் நிலை மிகவும் — வேதனைக்கு உரியதாக இருக்கின்றது. எழுத்துச் சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களாய், ஜடங்களாய் உலாவுகின்றனர். மண்ணில் இருந்து வெளியேறு து எஞ்சியிருக்கும் உங்கள் கலைஞர்கள் துதி பாடப் பணிக்கப்படுகின்றனர். மறுப்பவர்கள் ஈழத்துரோகிகளாக்கப்படுகின்றனர்.

இத் துப்பாக்கிக் கலாச்சாரத்திற்கு ஒருவகையில் நீங்கள் யாவரும் பொறுப்பேற்க வேண்டியவர்களே. உங்களது வர்க்கச் சார்பு கலாச்சார இயக்கங்களை நகரம் சார்ந்த உயர் நிறுவனங்களுக்குள் கட்டுப்படுத்திவைத்து இருந்தது அரசியல் இயக்கத்திற்கும், கலாச்சார இயக்கத்திற்குமான உறவு

www.tamilarangam.net

நிலைபற்றிய குழப்பங்களை ஏற்படுத்தியது. இந்நிலை உங்கள் மத்தியில் அரசியல் அடித்தளம் இன்றிய கலாச்சார இயக்கங்களையும், அரசியல் இயக்கங்களின் ஜனநாயக மறுப்புக்குட்பட்ட பிரச்சார பாணியிலான கலாச்சார இயக்கங்களையுமே தோற்றுவித்தது. இத் துர்ப்பாக்கிய நிலையே இன்றைய வடக்கு, கிழக்கின் கலாச்சாரத் தேக்கத்திற்குக் காரணமாயின.

எனவேதான் சொல்கிறேன். உங்கள் கடந்த காலம் பற்றிய மீளாய்வைத் தொடங்குங்கள். பரந்துபட்ட மக்கள் மத்தியில் நிலையான கலாச்சார இயக்கங்கள் தோற்றம் பெருமைக்கு அல்லது தோற்றம் பெற்றவை அழிந்து போனமைக்கான காரணங்கள் என்ன என்பதை பரிசீலனை செய்யுங்கள். அதனூடாக சரியான அரசியல் அடித்தளம் கொண்ட கலாச்சார இயக்கங்களைக் கட்டுவதற்கான முயற்சிகளைத் தொடங்குங்கள்.

அங்கே இறந்துபோன மனிதாம்சத்தையும், ஜனநாயகத்தையும் மீட்டெடுப்பதற்கான போராட்டத்தைத் தொடருங்கள் என பிரசங்கமே செய்துமுடித்துவிட்டார் ஜனநாயகத்தார்.

எனக்கு வெட்கமாய் — போய்விட்டது. அவரை நிமிர்ந்து பார்க்காமல் தலையைக் குனிந்தவாறே "நீங்கள் வர வேண்டாம். ஆனால் உங்களை எமது மண்ணுக்கு விரைவில் வரவழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்" என வாக்குறுதி கொடுத்துவிட்டேன். ஆனால் இன்றைய நிலையில் என்ன செய்ய வேண்டும்? எங்கிருந்து தொடங்க வேண்டும்? என்பது பற்றி எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது●





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுடலை மேட்டில்

சிறுகதை

மே. ரவீந்திரன்

அப்படியொரு சம்பவம் நடக்கும் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஏன் இன்னும்கூட அகிலனால் நடந்தவைகளை ஜீரணித்துக் கொள்ளக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

'எங்களுக்கு எப்போது விடிவு பிறக்கும்? நாங்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு முடிவேயில்லையா?' இப்படி அவனுக்குள் பல கேள்விகள்.

இன்னும் சில மணித்தியாலங்கள்தான் சோமுவினை அவனால் காணமுடியும். பின்னால் அவனை நிரந்தரமாக இவ்வுலகில் என்றுமே பார்க்கமுடியாது.

அகிலனுக்கு நெஞ்சு லேசாக வலித்தது. செம்பில் இருந்த நீரை வாயில் ஊற்றிக்கொண்டான். சேர்ட்டை எடுத்து மாட்டியவன் தெருவில் இறங்கிய போது வெய்யில் தகித்தது.

நேற்று நண்பகல் தான் அந்தத் துர்ப்பாக்கியச் சம்பவம் நடந்தது.

பிறவுண் வீதிச் சந்தியில் உள்ள இலங்கை மின்சார சபை அலுவலகத்தில் அகிலன் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தான்.

எங்கோ தொலைவில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் பக்கமாகத்தான் கேட்டது. திடீரெனக் காற்றுடன் கலந்த சத்தத்தினால் அகிலன் சற்று பதட்டப்பட்டுத்தான் போனான்.

"தம்பி ஏதும் பிரச்சினையே? துவக்குச் சூடுகள் கேக்குது"

மின்சாரசபை எஞ்சினியர் கேட்டார். அவர் உள்ளூரப் பயந்து போயிருந்தாலும் அதனை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ரவுண்லதான் பிரச்சினை போல கிடக்கு. வெளியாலபோய் விசாரித்துப் பார்ப்பம்"

பதிலளித்தவன் சைக்கிளை உருட்டிக்கொண்டு தெருவுக்கு வருகிறான். சனங்களின் முகங்களில் எல்லாம் கலவரத்தின் ரேகைகள். சந்தியில் வாகனங்கள் குறுக்கும் நெடுக்குமாக விரைந்து கொண்டிருந்தன. பாடசாலைகளையும் வேளைக்கே விட்டிருந்தார்கள். வாகனங்களின் நெரிசலுடன் மாணவ, மாணவிகளின் நடமாட்டமும் சேர்ந்து பிறவுண்வீதியை நிறைத்துவிட்டிருந்தது.

அகிலன் சைக்கிளை நீராவியடிப்பக்கமாக மிதித்தான். பிரச்சினை எங்க நடந்தது எண்டு விசாரிச்சு பார்த்துத்தான்போகவேணும். உதில நடந்து வாறவரிட்ட கேட்டுப் பார்ப்பம்.

"அண்ணை உதால போகலாமே?"

அகிலன் சைக்கிளில் இருந்தவாறே காலூன்றிக் கேட்டான்.

"வினசர் தியேட்டருக்குக் கிட்டத்தான் தம்பி ஆமிக்காறங்கள் சுடுறாங்கள். பார்த்துப் போம்"

சம்பவத்தைப் பூரணமாக தெரிந்துகொள்ளாமல் அலுவலகம் செல்ல அவன் விரும்பவில்லை. பத்திரிகையாளன் என்றால் இப்படிப் பல பயங்கரங்களையும் சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

பெரியாஸ்பத்திரிக்குபோனால் விபரந் தெரியுந்தானே. இறந்தவர்களையும், காயம்பட்டவர்களையும் அங்கதானே எடுத்து வருவினம்.

அகிலன் ஆஸ்பத்திரியின் விசாரணைப் பீடத்தை நெருங்கி அங்கிருந்தவரிடம் விபரம் பெற முயன்றான். விசாரணைப் பீடத்திலிருந்தவர் அருகே அமர்ந்திருந்த பெண்மணியிடம் கேட்குமாறு சைகை காட்டினார்.

வெள்ளை நிறச் சேலையில் காணப்பட்ட அவளைக் கண்டு ஒருகணம் தயங்கியவன் "மிஸ் இண்டைக்கு சூட்டுக்கேஸ் எண்டு யாரையாவது அட்மிட் பண்ணியிருக்கிறீங்களா?"

"நீங்க பேப்பர் ரிப்போட்டர்தானே? செய்திகளை எடுக்கிறதுக்கு மட்டும் வந்திடுவீங்க. ஆனால் எழுதிறதெல்லாம் எங்களைத் திட்டித்தான். உங்களுக்கெல்லாம் உதவி செய்யக் கூடாது"

வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்தாள்.

அகிலனுக்கு அவளின் ஆத்திரத்திற்கான காரணம் புரிந்தது. சில நாட்களுக்கு முன்னர் தான் வைத்தியசாலையில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து அவன் தனது பத்திரிகையில் கட்டுரை எழுதியிருந்தான்.

தனிப்பட்ட முறையில் யாரையும் மனம் நோகச் செய்ய வேண்டும் என்பதற்காக எழுத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை. அவளிடம் நிலைமையை விளக்கிச் சொல்லவும் அவகாசம் இல்லை. மேசையில் கிடந்த பதிவுப் புத்தகத்தை எடுத்துப் பார்க்கிறான்.

மரணமானவர்கள் பட்டியலில் இருந்த பெயர்களை ஒவ்வொன்றாகக் குறித்துக்கொண்ட போதுதான் சண்முகம் சோமபாலன் என்ற பெயர் அகிலனின் கண்களில் பட்டது. திரும்பவும் அதே இடத்தை அவனது பார்வை குத்திட்டது. சந்தேகமேயில்லை. அதே பெயர்தான்.

சோமபாலன் வவுனியாவில் கடையொன்றில் வேலை பார்க்கிறான். அகிலனின் நெருங்கிய நண்பன். நேற்றுத்தான் ஊருக்கு வந்திருந்தான்.

அகிலனுக்கு துக்கம் நெஞ்சை அழுத்தியது. நேற்று என்னோட கதைக்கேக்ககூட சோமு எத்தனை சந்தோசமாயிருந்தான்.

"டேய் அகிலன், வீட்டில எனக்கு கலியாணம் பேசியினம். இப்ப என்னத்துக்கு அவசரப்படுறியள் எண்டன். அம்மா என்ரை பேச்சைக் கேக்கிறதா இல்லை!

"நல்ல விசயந்தானேடா சோமு. காலா காலத்தில கலியாணம் செய்யிறதுதான் நல்லது. அப்ப கெதியில சாப்பாடு இருக்கு. அப்படித்தானே?"

அவன் என்னைப் பார்த்து மௌனமாகப் புன்னகைத்தானே.



www.tamilarangam.net

இத்தனை வயதில் இவனுக்கு இப்படியொரு முடிவு ஏற்பட்டிருக்க வே கூடாது. கடவுளை மனதினுள் திட்டித் தீர்க்கிறான்.

இதெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு? நாங்கள் சுதந்திரமாய் வாழ்கிற நாட்கள் வரவேமாட்டாதா?

அகிலனுக்கென்டால் தன்ரை எதிர்காலத்தைப் பற்றி பெரிசாக நம்பிக்கையில்லை. அந்த மகிழ்ச்சியான நாட்களெல்லாம் சோமுவைப்போல இறந்தவைகளாகிவிட்டன.

அகிலன் பாடசாலையில் படித்த நாட்கள் மிகவும் அமைதியானவை. துரையப்பா விளையாட்டரங்கில் நடக்கும் உதைபந்தாட்டங்கள் எதையுமே தவறவிடமாட்டான்.

பாடசாலை விட்டதும் – சோமுவுடன் உதைபந்தாட்டம் பார்க்கச் சென்றால் வீடு திரும்ப இரவு எழு மணிக்கு மேலாகிவிடும். பஸ்ஸிற்கு வைத்திருந்த பணத்தில் கடலையோ, ஐஸ்கிரீமோ வாங்கிவிட்டால் வீட்டிற்கு வருவதற்கு பணம் கிடையாது. நாயன்மார்கட்டு வரை நடைதான். உற்சாகமாக பல கதைகளும் பேசி நடப்பதில் களைப்பு என்பதே தெரிவதில்லை.

நல்லூர்த் திருவிழா தொடங்கிவிட்டால் இருபத்தைந்து – நாட்களும் உற்சாகந்தான். மிட்டாய்க்கடைகள், ஐஸ்கிரீம் கடைகள், மணி ஐயர் பிரசங்கம் என்று எல்லாம் பார்த்து திரும்ப நள்ளிரவாகிவிடும்.

அப்ப எல்லாம் அவன் எதுக்குமே பயப்பிடுறதில்லை. இப்படித்தான் ஒருநாள் நல்லூர் திருவிழா முடிஞ்சு வீடு திரும்பேக்க நேரம் பத்துமணி இருக்கும்.

நாயன்மார் கட்டு குளத்தை அண்டிய இடம் முழுவதும் இருள் மண்டிக் கிடந்தது. தார் போடப்படாத மண் வீதி. வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட பூவரச மரங்கள் காற்றில் அசைந்தாடுவது ஒருவித பயப்பீதியை ஏற்படுத்தியது.

"அகிலன் பின்னால திரும்பிப் பாரடா. யாரோ வாறது மாதிரிக் கிடக்கு"

சோமுவுக்குப் பின்னால் பார்க்கும் அளவிற்குத் தைரியம் கிடையாது.

"ஒருத்தரையும் காணேல பனையோலை விழுந்திருக்கும். நீ நல்லாய்ப் பயந்திட்டாய்"

சோமு சரியான பயந்தவன். அகிலன்தான் அடிக்கடி உற்சாகப்படுத்துவான்.

தூரத்தில எங்கையாவது சூட்டுச் சத்தம் கேட்டாலே அன்றைக்கு முழுவதும் வீட்டை விட்டே வெளிக்கிடமாட்டான். நேற்று ஆமிக்காறங்கள் சுடேக்கை என்ன பாடுபட்டிருப்பான்.

எப்படியெல்லாம் வாழ வேணும் என்று கற்பனை பண்ணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிருந்தான். எல்லாம் ஒரு நொடியில்... சீ இதென்ன வாழ்க்கை. அகிலன் எட்டி நடக்கிறான்.

ஒழுங்கை முகப்பிலேயே தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. பறை ஒலி பெரிதாய் கேட்கிறது. படலை முன்பாகவும் முற்றத்திலும் ஆண்கள் சிலர் கூடிக் கதைத்தபடி நின்றனர்.

"ஆர் அகிலனே? வாரும் தம்பி. கிரியை முடிய எப்பிடியும் பதினொரு மணியாகும். பிறகு பாத்துக்கொண்டிராமல் பிரேதத்தை எடுத்துப் போடவேணும். வரவேண்டியவையளும் வந்திட்டினம்"

வில்வராசா மாஸ்டர் சொன்னதற்கு அவன் தலையசைத்தான்.

'என்பாம்' பண்ணினதாலை உடம்பு கறுத்துப் போயிருந்தது. நீலவர்ண ஜீன்சும், அதற்கேற்றாப்போல சேர்ட்டும் அணியப்பட்டிருந்த சோமுவின் பூத உடலை பார்த்தபடி மௌனமாகக் கண்ணீர் சிந்தினான் அகிலன்.

கிரியை தொடங்கியிட்டுது. தகப்பன்தான் சுண்ணம் இடிக்கிறார். இப்ப எல்லாம் எங்கடை மண்ணிலை மாறித்தான் நடக்குது.

செம்மணிச் சுடலையில் சோமுவின் சிதை எரியத்தொடங்கிவிட்டிருந்தது.

இஞ்ச தொடருகிற சாவுகளால்கூடசடலங்களை சுடுகாட்டுக்கு எடுத்துவாறதுக்கும் ஆக்கள் இல்லாமல் போகலாம். வீதியோரங்களில் கிடந்து காகங்களுக்கும், நாய்களுக்கும் இரையாகி.... அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ●



<u>நன்றி</u>

கலம் 37இன் முன்னட்டைப்படம் உடுவிலுள்ள 'பூரணி' பெண்கள் மையத்தின் பிரசுரம்.

---

பின்னட்டை அறிவித்தல் 'புதிய ஜனநாயகம்' 16-31 ஜனவரி 91 இதழில் மனோகரன் எழுதிய விமர்சனத்திலிருந்து.

---

www.tamilarangam.net

# அகதிகள்

(வெளிநாடு)

## குறுக்கும் நெடுக்கும்

கலம் 16இல் "இப்படியும் குறுக்கெழுத்துப்போட்டி வைக்கலாமே!" என்று 'ட்ரயல்' பார்த்திருந்தோம். யாரும் வன்மையாகக் கண்டிக்கவில்லை. எனவே இந்த வருடத்திலிருந்து அவ்வப்போது ஒவ்வொரு விடயத்தை மையமாக வைத்து 'குறுக்கும் நெடுக்கும்' தயாரிக்கலாமென ஆலோசித்திருக்கிறோம். நீங்களும் நல்லதொரு விடயத்தைத் தெரிந்தெடுத்து தயாரித்து அனுப்பி வைப்பதில் எந்த ஆட்சேபணையுமில்லை!!

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | 2 | 4 | ■ |
| 5 | | | | ■ |
| 6 | | | ■ | 7 |
| | ■ | 8 | 9 | |
| 10 | | | | |

மேலிருந்து கீழ்:

1. வசதியிருந்தவர்களில் அநேகர் வெளிநாடுகளுக்கு வந்த காரணங்களில் ஒன்று. இயக்க அகராதியில் இதற்கு 'துரோகம்' என்ற ஒத்த கருத்துமுண்டு!

2. புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு வந்தபின் சொந்த நாட்டையும் துண்டிக்காமல், வந்த நாட்டிலும் இணையாமல் புதுச் -----ஆகிவிட்ட அகதிகளின் நிலை குழம்பியேயுள்ளது.

4. தங்கள் மௌனத்திற்கு காரணமாக இலங்கையில் இருக்கும் மக்கள் இதைச் சொல்வதில் ஓரளவு நியாயம் இருக்கிறது. ஆனால் வெளிநாடுகளில் இருப்பவர்களும் இதையே சொல்லி அராஜகத்திற்கு அரோகரா சொன்னால்.... முதலெழுத்து காணமற்போய் தலைகீழாயிருப்பதுபோல் மனிதாபிமானமும் தலைகீழாகிவிடும்.

7. 'தஞ்சம்' தந்த அரசுகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரடி, மறைமுக ஒடுக்குமுறைகள், மனதைச் சாகடிக்கும் இனவாதம், தனிமைப்படுத்தும் அந்நியச் சூழல், கேள்வியாகியுள்ள குழந்தைகளின் எதிர்காலம்... இவற்றிலிருந்து 'இது' அடையவேண்டுமானால், எங்கள் தாயகமும் பலவற்றிலிருந்து 'இது' அடையவேண்டும் (மோட்சம் அல்ல).

9. புலப்பெயர்வு வாழ்வாகுமா? ஐரோப்பிய அரசுகளிலிருந்து அரசியல் தெ(பு)ரியாத அப்பாவி ஐரோப்பியர்கள் வரை எங்களை அடித்துத் துரத்தத் தயாராவது தெரிந்தாலும், தலைகீழாக இருக்கும் எமது 'இதை' நாடவிடாமல், அங்கு நிலவும் கொலை அரசியல் வெருட்டுகிறதே!

இடமிருந்து வலம்:

1. இலங்கையிலிருந்து புறப்பட்டு வந்து ஐரோப்பிய அரசுகளிடம் முதலில் எல்லோரும் கேட்டது இதைத்தான். பிறகு பலர் இங்குள்ள சீரழிந்த கலாசாரத்திடம் இது அடைந்து விட்டார்கள்.

5. கொலம்பியாவிலிருந்து போதைமருந்து கடத்தவோ அல்லது சொந்த மக்களையே குழி தோண்டிப் புதைக்கவோ இயக்கங்களுக்குக் காசு சேர்ப்பது/கொடுப்பது என்று இங்கிருப்பவர்களில் பலர் ஈடுபட்டிருக்கையில், மனித உரிமை மீறல்களுக்கும், அராஜகங்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்க 'இது' எடுக்கும் (ஏகே47 அல்ல) பலர் இருந்தாலும் உடைவு, விரோதம் குழுவாதம்... என்று இவர்கள் பலமோ கவலைக்கிடம்!!

6. இங்கே நாங்கள் 'இதை' வீணாக்கிக் கொண்டிருக்கும் — போது, அங்கே மனிதர்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள்.

8. இலங்கையில் அரசும், இயக்கங்களும் மனிதர்களை 'இப்படிச் செய்து' மண் போடுகிறார்கள். வெளிநாடுகளில் பலர் பணத்தையும், மனிதாபிமானத்தையும் 'இப்படிச் செய்து' கண்மூடுகிறார்கள். குழப்பம்தான்!

10. மேற்கு ஜேர்மெனியில் மட்டுமல்ல, சுவிஸ், சுவீடன், நோர்வே, பிரான்ஸ், லண்டன் என்று இவர்களின் புதிய மூக்கு சீ போக்கு வளர்ந்து கொண்டே— போகிறது—அரசுகளின் உதவியுடன். இது நிச்சயம் வெளிநாட்டவர்களுக்கு எதிரான போக்குமட்டுமல்ல.

விடைகளையும் இந்தக் கலத்திலேயே தந்தால் உங்கள் சிந்தனையைத் தடுத்த குற்றத்திற்குள்ளாவோம் என்பதால், அடுத்த கலம்வரை காத்திருக்கலாமே!

*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## ஜேர்மெனியில் தமிழ் நூலகம்

விற்றன் பொதுநூல்நிலையத் தமிழ்ப்பிரிவில் சுமார் 1,000 தமிழ் நூல்கள் உங்கள் வாசிப்புக்காக உள்ளன.

இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளுடன், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளும்.

சமூக நாவல்கள், மர்ம நாவல்கள், குறுநாவல்கள், சரித்திர நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மருத்துவம், மதம், கல்வி, சமையல், விளையாட்டு, நாடகங்கள், சிறுவர்-நூல்கள், அரசியலும், சமூகமும்...... இன்னும் பல தரப்பட்ட விடயங்கள்.

தமிழ்ப் பிரிவிலுள்ள நூல்களை நீங்கள் இரவலாகப் பெறுவதற்குரிய தகவல்களையும், தமிழ் நூல்களின் விபரங்களையும் பெற்றுக்கொள்ள கீழுள்ள முகவரியுடன் தமிழில் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

Stadtbücherei Witten
Tamil Sektion
Ruhrstr. 48

5810 Witten



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

( 48ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைச் செய்ய புலிகளால் முடியவில்லை முடியாததற்குக் காரணமே அவர்கள் அரசியல் பிரசாரத்தை பிரதானமாகக் கருதவில்லை என்பதும், மக்களைப்பற்றி அக்கறையற்றுச் செயல்படுவதும்தான்."

"அப்ப புலியள் இதிலை இருந்து மீளமுடியாதா?"

"சந்தர்பவாதம் எப்போதும் பெரியபெரிய விலைகளைக் கொடுத்துத்தான் மேவப்பட்டிருக்கிறது. 14 மாதகால பேச்சுவார்த்தையின் போதைய சந்தர்ப்பவாதத்திற்கு விலை கொடுத்துத்தான் ஆகவேண்டும். அந்தவிலை எது என்பதுதான் பிரச்சினை. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேணுமென்கிறது அரசு. அது முடியாது என்கிறது புலி. யுத்தம் இன்னும் சிலநாள் நடக்கத்தான் போகிறது. புலியை இப்போது பாதுகாக்க யாராலும் முடியாது. அவர்கள் மறந்துபோன மக்களைத்தவிர."

"என்ன சொல்கிறாய்?"

"ஓம். மக்களிடம் தவறுகளை ஒப்புக்கொண்டு தேசிய விடுதலை யுத்தத்திற்கு அனைத்து சக்திகளையும் திரட்டும் ஐக்கிய முன்னணிக்கு தயாராகாதவரை புலிகள் இருந்த, இருக்கிற நிலையைவிட கீழே கீழே போவது தவிர்க்க முடியாதது."

நான் எதுவும் பேசவில்லை. நேரம் நன்றாக ஏறிவிட்டிருந்தது. புலிகள் இவ்வளவு தவறுகள் இருந்தும் எப்படி தலைமைக்கு வந்தார்கள் என்ற அந்த கடிதத்திலிருந்த கேள்வி நினைவுக்கு வந்தது. ஆனால் அதுபற்றி இப்போது பேசமுடியாது. இரவு பஸ் பிடித்து வீடு போய்ச்சேர்வதுதான் இப்போதைய பிரச்சினை. என்னதான் எல்லா தஸ்தாவேஜுகள் இருந்தாலும் இலங்கைப் பொலிஸ் பிடிக்க மாட்டுது என்பதற்கு உத்தரவாதமில்லையே! நான் போவதாக விடை பெற்றுக்கொண்டு நடந்தேன்.

பேச நிறைய இருக்கு; பிறகு ஒருமுறை வருவோம் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

"தேசியம்" உள்ள அல்லது
"தேசியம்" இல்லாத
"சிங்கள்"
போராட்டத்திற்கு
தந்த சின்னமா?
அல்லது விட்டுப் போன
மிச்சமா???

→






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவசேகரம்

## எழுப்பிய பிரச்சனைகள்

சக ஓடிகளினால் வைக்கப்பட்ட தூண்டில் மீதான விமர்சனமும், பின்னர் இவ் விமர்சனம் பற்றி தொடரும் விவாதங்களையும் வாசித்து வருகிறேன்.

சக ஓடிகள் விமர்சனம் தொடர்பாக திரு சிவசேகரம் எழுதியிருந்த கட்டுரைபற்றி எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் தொட்டுக் காட்டுகின்ற விடயங்களில் எனக்கு முரண்பாடானதைப் பற்றி மட்டும் இங்கு சொல்ல விரும்புகிறேன். உடன்பாடானதை விடவும் முரண்பாடானதைப் பற்றி பேசுவதே விவாதப் போக்கை ஆரோக்கியமாக நடாத்த உதவும் என்பது எனது அபிப்பிராயம்.

புத்திஜீவிப் போக்குகளை சக ஓடிகள் வகை செய்திருந்தபடி மூன்று போக்குக்குள் குறுக்கி விட முடியாது என்பது சிவசேகரம் அவர்களின் வாதம். போராட்டத்தின் செல் நெறி தொடர்பாக வெவ்வேறு சக்திகளினாலும் புத்திஜீவிகளினாலும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன என்று அவர் சொல்கிறார். தற்கால சூழ்நிலை துணை நிற்காதது காரணமாக இக் கருத்துக்கள் ஒரு வலிய அரசியல் இயக்கத்தை விருத்தி செய்ய முடியவில்லை என்றும் வெறும் விமர்சனமாக மட்டுமே முற்போக்கான சனநாயகக் கருத்துக்கள் குறுகி விட்டன என்று சொல்லப்படும்

www.tamilarangam.net

குற்றச்சாட்டு நியாயமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சகஓடிகளின் கருத்துக்களில் எந்தவிடத்திலும் முற்போக்கு சனநாயக சிந்தனை வெறும் விமர்சனமாகவே குறுகிவிட்டது என்று தெரிவிக்கப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். ஆனால் எனது பிரச்சனை அதுவல்ல. திரு சிவசேகரம் அவர்கள் சொல்வது போல பல அரசியல் சக்திகளாலும் புத்திஜீவிகளாலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஒரு அரசியல் இயக்கமாக விருத்தியடையாமைக்கு காரணம் சமகாலச் சூழல் துணையாக இல்லாததுதானா என்பது பற்றியதே எனது பிரச்சனை. இந்தக் கருத்து சக ஓடிகளால் முன் வைக்கப்பட்ட கருத்துக்களின் ஆழத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் மேலோட்டமாகத் தெரிவிக்கப்பட்ட ஒன்று என்றே நான் நினைக்கிறேன்.

சகஓடிகளால் முன் வைக்கப்பட்ட பிரச்சனை நமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான சரியான திசைவழி முன் வைக்கப்படவில்லை என்பதே. இது போராட்டத்தின் தவறான பக்கங்கள் குறித்து சகஓடிகளால் வகைப் படுத்தப்பட்ட தூய்மை வாத அணிக்குள் எழுந்த விமர்சனங்களிற் போதாமையும் அவை தவறுகளை இனம்கண்டு கொள்ளுமளவிற்கு சரியான நிலைப்பாட்டை முன் வைக்க முடியாமல் உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன் அத்தகைய ஒரு கருத்துப் பலமிக்க பாதையைக் காண்பதற்கான தேட்டத்தையும் அதற்காக திறந்த விவாதங்கள் நடத்தப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. அது பல கருத்துக்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருப்பதை மறுக்கவில்லை, மாறாக அவை எமது தேசம் கோரி நின்ற தத்துவார்த்த அரசியல் மற்றும் ஸ்தாபன வழியை தெளிவாக வைக்கும் அளவிற்கு ஆழமாக இல்லையென்பதையே சுட்டிக் காட்டுகிறது என நினைக்கிறேன். ஆனால் திரு சிவசேகரம் அவர்கள் சொல்வது வைக்கப்பட்ட கருத்துக்கள் சமகால சூழ்நிலைத் துணையின்மை காரணமாக இயக்கமாக வரவில்லை என்பதாகும்.

முதலில் சூழலின் துணை என்பது ஒரு வலிய அரசியல் இயக்கத்தின் அடிப்படையானதுதானா என்பதைக் கவனிக்க வேண்டும். உண்மையில் சூழ்நிலையின் சாதகத் தன்மை என்பது புரட்சிகர சக்திகளின் அரசியல் பணிக்கு இரண்டாம் பட்சமானதே தவிரவும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் எப்போதும் புரட்சிக்கான சூழ்நிலையானது நிலவவே செய்கிறது.

சிக்கல் எங்கே என்றால் அந்த நிலைமைகளைச் சரிவரப் புரிந்து

www.tamilarangam.net

கொள்வதிலும், அந்த நிலைமைக்கேற்ற விதத்தில் அரசியல் பணியை மேற்கொள்ளவும், உரிய போராட்ட வடிவத்தினைக் கைக் கொள்ளவும் அடிப்படையான போராட்டத்தின் செல்நெறி பற்றிய தெளிவான திட்டம் எம்மிடம் இல்லை என்பதும் அதை உருவாக்குவதற்கான சித்தாந்த பலம் எம்மிடம் இருக்கவில்லை என்பதுமே.

எமது கடந்தகால அரசியல் அனுபவங்கள் தோல்விகளாக இருப்பது இந்த சித்தாந்த வெறுமையை மேலும் முக்கியப் படுத்துகின்றதேயன்றி, எமது சிந்தனை முறையைக் கேள்விக் குள்ளாக்குகிறதே அன்றி அவை பலமாக இருந்து, சூழ்நிலை சரியில்லாததால் தோற்றுப் போனதாக் காட்டவில்லை என்றே நான் நினைக்கிறேன்.

எம்முடைய கருத்துக்கள் சரியாக இருந்தனவென்றால், ஏன் எம்மால் ஒரு வலிய இயக்கத்தைக் கட்டி எழுப்ப முடியவில்லை? சூழ்நிலை சாதகமற்றதென்றால் அந்தச் சூழ்நிலையின் மீது தாக்குதல் தொடுக்கும் விதத்திலாவது எமது போராட்டம் ஏன் வளர்ச்சி பெறவில்லை?

சிவசேகரம் அவர்களினால் குறிப்பிடப்படுவது போல் பலஅரசியல் சக்திகளாலும் புத்திஜீவிகளாலும் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள்(எமக்கு தெரிந்தவரை ஒரு வலிய அரசியல் இயக்கத்தை கட்டுமளவிற்குப் பலம்வாய்ந்த கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப்பட்டதாக தெரியவில்லை.) எவை என எடுத்து ஆராய்வோ-மானால் எமக்கு அவற்றின் பலவீனம் புரியும். சூழலின் சாதகத் தன்மை பற்றிய எமது கணிப்பீடானது, அதற்கேற்ற ஸ்தாபன வடிவங்களை, போராட்ட வடிவங்களை உருவாக்கிக் கொள்ள அவசியமானதேயன்றி புரட்சிக்கான திட்டத்தை (மூலோபாயம், தந்திரோபாயம் என்பவற்றை, புரட்சியின் கட்டத்தை, பிரதான அடிப்படை முரண்பாடுகளை, இலக்குகளை வரையறை செய்வதில்..) வகுத்துக் கொள்வதில் ஆதிக்கம் செலுத்த முடியாது.

போராட்டம் ஆரம்ப முதலே ஆயுதப் போராட்டமாக அமைய வேண்டுமா, ஸ்தாபனம் இரகசியமாக கட்டப்பட வேண்டுமா,போன்றவற்றையும் ஒரு குறிப்பிட்ட தாக்குதலை நடாத்த இது சரியான தருணமா என தீர்மானிப்பதிலுமே இது பெரிதாக ஆதிக்கம் செலுத்துகிறது.

உண்மையில் சூழ்நிலையின் சாதகத் தன்மைதான் எம்முடைய மண்ணில் ஒரு வலிய இயக்கம் தோன்றாததற்கு காரணமாக இருந்ததென்றால், அவ்வலியதொரு இயக்கத்தை கட்டுவதற்குரிய திட்டம் ஏற்கனவே இருந்திருக்க வேண்டும். அதற்கென ஒரு தெளிவான பார்வை இருந்திருக்க வேண்டும். அப்படியானால்

www.tamilarangam.net

அது என்ன? கடந்த பத்தாண்டு காலமாக உக்கிரம் பெற்ற தேச விடுதலைப் போராட்டம் பற்றி அது முன் வைக்கும் கருத்துதான் என்ன?.

என்னைப் பொறுத்தவரை பல முற்போக்கான சனநாயகக் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டதை நான் அறிவேன். முற்போக்கு சனநாயக் கருத்துக்கள் ஒரு சனநாயகத்திற்கான அணியை உருவாக்க முடியுமே ஒழிய புரட்சிக்கான-தேசிய விடுதலைக்கான பாதையில் முன்னேறி விடமுடியாது.

எம்மிடையே சனநாயகத்திற்கான தேவை இன்னமும் நிலவிக் கொண்டிருப்பதால் சனநாயக கோரிக்கை முற்போக்கானது தான். ஆனால் அது போதுமானதா?

இந்திய அரசு எதிர்ப்பு, அமைப்புகட்குள் உட்கட்சி சனநாயகத்திற்காகப் போரிடல், மனித உரிமைக்காகப் போரிடல், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக தமக்குத் தெரிந்த வழிகளில் போரிடல் என்பவை அனைத்தும் முற்போக்கான அம்சம் கொண்டவைதான். தேசியப் புரட்சிக் கோரிக்கையை நிறைவு செய்ய இவை போதுமானவையாக இருந்தனவா?

ஒடுக்கப்படுகின்ற தேசத்தின் தேசியக் கோரிக்கையை ஆதரிப்பது, அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்ப்பது, சாதிய ஒடுக்கு முறையை எதிர்ப்பது, இன்னும் பலவேறு சனநாயக கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுவது, தொழிற் சங்கங்கள் அமைத்து தொழிலாளர் நலன்களுக்காக, பொருளாதார மேம்பாட்டிற்காக போராடுவது எல்லாம் நிச்சயமாக முற்போக்குத் தன்மை கொண்டவை. ஆனால் இவை ஒரு தேசத்தின் புரட்சிக்குப் போதுமானவையா?

சிவசேகரம் சொல்வது, சூழலின் சாதகத் தன்மை சரியாக இருந்திருப்பின் இவையெல்லாம் ஒரு வலிய இயக்கத்தைக் கட்டியிருக்கும் என்பதாக இருப்பின், அது வெறும் கற்பனையென்றே நான் கருதுகிறேன்.நாம் இந்த மாதிரியான சுய திருப்திப் படுகின்ற விதத்தில் பல முற்போக்கான கருத்துக்களைக் கொண்டவர்களாக கடந்த காலத்தில் வாழ்ந்தும், போராடியும் வந்திருக்கக் கூடுமாயினும், அது போதாது என நாம் உணராத வரை, இச் சுய திருப்தி ஆபத்தானது. உண்மையில் எமது தேசத்தினதும் மக்களதும் தேவை மிகவும் ஆழமானதாக உள்ளது. நாம் மிகவும் மேலே நின்று கொண்டிருக்கிறோம்.

தமிழீழம் தேவையா இல்லையா, தேசிய இனப்பிரச்சனை வேறொரு வழியில் தீர்க்கப்பட்டிருக்கலாமா என்று எல்லாம் கருத்து முன்வைக்கப்பட்டது உண்மைதான். இக்கருத்துக்களுக்கு சனநாயகம் மறுக்கப்பட்டது

www.tamilarangam.net

உண்மைதான். வெறுமனே சனநாயகம் மறுக்கப்பட்டதுதான் இக் கருத்துக்கள் ஒரு வலிய இயக்கத்தைக் கட்ட முடியாமல் போனதற்கான காரணம் என்று சொல்லி விடலாமா? இக் கருத்துக்களுக்கிடையே பலவீனமான, யதார்த்த பூர்வமற்ற தன்மைகள் இருந்ததும் காரணமாக இருக்க முடியாதா?

சகழடிகளின் கருத்துக்கள் இவைஎல்லாவற்றையும் விவாதிக்க வேண்டியவையாகச் சுட்டிக்காட்டி நிற்கின்றதென நான் நினைக்கிறேன்.

என்றைப் பொறுத்தவரை எமது புரட்சிகர சிந்தனையின் தரம், தேசத்தின் கோரிக்கைக்கு தலைமை வழங்குமளவிற்கு தத்துவார்த்த அரசியல் சக்தி மிக்கதாக இருக்கவில்லை.

இடதுசாரிக் கட்சிகள் யானை பார்த்த குருடராய் சுழகு என்றும் உரல் என்றும் கூறிக்கொண்டிருக்க, தமிழரசுக் கட்சியின் வாரிசுகளின் கையில் அங்குசம் கைமாறிவிட்டது. இன்றுவரை தமிழீழ சித்தாந்தமே தலைமையாதிக்கம் செலுத்தி வருகிறது.

எனவேதான் தொடப்பட்ட பிரச்சனை சிவசேகரம் அவர்கள் சொல்வதைவிட ஆழமானதென நினைக்கிறேன்.

தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாகச் சாதிக்க நாம் அனைத்து விடயங்கள் குறித்தும் விவாதத்தை நடாத்த வேண்டும். சிவசேகரம் அவர்களால் எழுப்படும் கேள்விகள் குறித்தும் கூடத்தான். ஆனால் அவர் கருத்துக்களை முன் வைக்காமல் கேள்விகளை மட்டும் கேட்பதில் அர்த்தமில்லை. அப்போது விவாதம் வளர்ந்து செல்லாது. சிவசேகரம் மட்டுமல்ல அனைவரும் பொறுப்புணர்வுடன் இதில் பங்கு கொண்டால் ஒரு பிரதான பிரச்சனையைத் தீர்ப்பதில் கணிசமான பங்கை ஆற்ற முடியுமென நம்புகிறேன்.

ந.மாணிக்கவாசகர்

(தொடர்ச்சி 52 ஆம் பக்கம்)

---

"புதிய ஜனனாயகம்" 16-31 ஜனவரி'91 இதழில் பிரசுரமான விமர்சனத்திலிருந்து பொதுவான குறிப்புகளும், 'தூண்டில்' பற்றிய கருத்துகளும் மட்டும் "நாறு மலர்கள்" பகுதியில் ந்ன்றியுடன் மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. "பாஸிஸ்டுகளே சிந்தனையைச் சிறைபிடிக்க முடியுமா!"

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

பார்த்திபன்

முன் கதைச் சுருக்கம்(!):

மேற்கு ஜேர்மெனியில் அரசியல் தஞ்சம் கோரிய சுமார் 20 ஆயிரம் தமிழ் அகதிகளில் (87ஆம் ஆண்டில் ஜேர்மெனி அரசின் புள்ளி விபரம்) ஆறு வருடங்கள் ஒன்றாக, ஒரே அறையில் 3 நண்பர்கள் வாழ்ந்துவரும் காலத்திலே ஒருநாள்....

வெளியே ஸ்னோ கொட்டிக் கொண்டிருந்தது. ஜன்னல்களில் புகார் திரை போட்டிருந்தது. வானத்தில் பலர் தேங்காய் துருவிக் கீழே கொட்டுவது போல.. ஸ்னோ மிக நேர்த்தியாகக் கீழே படிந்து கொண்டிருந்தது.

உள்ளே ரி. வி. யில் "நாங்கள் மட்டுமா ஆயுதம் விற்றோம்! பிரான்ஸ், பிரிட்டன், சீனா கூட விற்றனதானே?" என்று ஜேர்மெனிய அரச அதிகாரிகள் சமாளித்துக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு" என்றான் முத்து. யாரும் கவனிப்பதாயில்லை. திரும்பவும் பலமாக "எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு"

"நல்லதாய்ப் போச்சு" என்றான் பாலகுமார். "வெறுக்கிறதுக்காவது உனக்கு வாழ்க்கையெண்டு ஏதோ இருந்திருக்குத்தானே. எனக்கு ஒரு நாசமும் இல்லை"

ஞானம் ரி. வி. யைக் கவனித்துக் கொண்டிருந்தான். வளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடாப் பிரச்சினையில் அவன் அதிக அக்கறை காட்டினான்—உலகச் சண்டையாக மாறி தாங்களெல்லோரும் செத்துப் போவோமோ என்ற பயத்தில்.

"பகிடி விடாதை. நான் உண்மையாய்த்தான் சொல்லுறன். என்னடாப்பா விசர் விசராய் வருகுது. எல்லாம் ஞாய்யெண்டு போகுது"

"நானேன் பகிடிவிடுறன். நீதான் பகிடி விடுறாய். ஒரே மூ முக்கை இத்தினை வருசமாய் இருக்கிறம். உனக்கிருக்கிற மாதிரித்தானே எனக்குமிருக்கும். ஏதோ உனக்கு மட்டும் வாழ்க்கை வெறுத்த மாதிரியும், மற்றவைக்கு.."

"ஷ். மெல்லமாய் கதையுங்கோடா. அவங்கள் சொல்லுற தொண்டும் விளங்கேல" ஞானம் அவர்களைக் கடிந்தான்.

"உம். பெரிய அரசியல் அவதானி இவர். ருத் பேஸ்ற் வாங்கத் தெரியாம காறுக்கு போட்டுக் கழுவுறது வாங்கிக் கொண்டந்தவர் இப்ப மட்டும் டொச் விளங்கிப் பாக்கிறாராக்கும்" பாலகுமார் சிரிக்க, முத்துவும் சேர்ந்தான்.

ஞானம் எதுவும் பேசவில்லை. அதே கட்டிடத்தின் ஏதோவோர் தளத்தில் யாரோ பழைய பாடல்களைப் பெரிதாகப் போட்டார்கள். "எல்லாம் மாயைதானா...."

"என்னடாப்பா செய்யலாம்? ஒண்டுமே பிடிபடுகுதில்லை. அங்கயும் குண்டு வெடிக்கிறது நிக்கிறதாய் தெரியேல. இங்கயும் ஏதேன் கிடைக்குமோவெண்டும் தெரியேல"

"——த்த சீவியம்" பாலகுமார் தூசனத்தில் மொழிபெயர்த்தான்.

"ரீ யொண்டு குடிச்சால் நல்லாயிருக்கும்போலயிருக்கு" ஞானம் ரி. வி. யிலிருந்து கண்களை எடுத்தான்.

"திறமாயிருக்கும்" முத்து

"சுப்பர் ஐடியா" பாலகுமார்.

எல்லோரும் அபிப்பிராயம் சொல்லிவிட்டு அப்பிடியே இருந்தார்கள். யாரும் அசையவில்லை. நீ செய்யேன் என்றமாதிரி ஆளை ஆள் பார்த்துக்கொண்டிருந்தார்கள் — வழமைபோல்!

ரி. வி. யில் நடைபெற்ற நிகழ்ச்சி முடிந்து விளம்பரம். குறிப்பிட்ட பிறாண்ட் சுவிங்கம் சாப்பிட்ட ஆணைப் பெண்கள் — கொஞ்சினார்கள். ஷேவ் எடுத்துவிட்டு குறிப்பிட்ட பிறாண்ட் ஆவ்ரஷேவைப் பூசிய ஆணையும் பெண்கள்ளகொஞ்சினார்கள். புதிய மொடல் காரையும் பெ..

வெளியே ஸ்னோ தளர்வதாக இல்லை. சீராகக் கீழிறங்கிக் கொண்டிருந்தது. பல வீடுகள் லைற் போட்டிருந்தன.

"மூதேசியள். கொண்டுவந்து தந்தாக் குடிப்பியளாக்கும்"

www.tamilarangam.net

என்று ஞானம் சொன்னதற்கும் யாரும் அசையவில்லை.

"ஒரு ஒப்பந்தம். நான் தண்ணி சுடவைக்கிறன். நீங்கள் ஆரேன் தேயிலையைப் போடுங்கோ" ஞானம் எழுந்து போய் தண்ணீர் சுடவைத்தான். "என்னென்னத்துக்கு ஒப்பந்தம் எண்டில்லாமப் போச்சு"

"இரவுக்கு என்ன சமையல் போடுவம்?" பாலகுமார் விசாரித்தான்.

"மனுசருக்கு எரிச்சலைக் கிளப்பாதை. பே விசரில இருக்கிறன். ஆறு மணியாகேலை. அதுக்குள்ள தின்னுற யோசினை"

"ஆகா! அற்புதமான கருத்துகள். இரவு பசிக்குதெண்டியோ சட்டியால தருவன்"

முத்து தனக்குள் யோசித்தான். 'சீ, என்ன சீவியமிது? முந்தி வேலையில்லையெண்டு விசரில திரிஞ்சா இப்ப வேலைசெய்யிறதே வேலையாய் போச்சு. என்னத்தை உழைப்பான்? உழைச்சு என்னத்தைச் செய்யிறது? அங்க சனம் சாகுது. இஞ்ச நாங்கள்!'

"டேய் ஞானம், முத்து மண்டையைப் போட்டிட்டான்"

"விடாதை" குசினிக்குள்ளிருந்து ஞானம் எச்சரித்தான்.

"சும்மாயிருங்கோடா. மனிசரை யோசிக்க விட்டுடாதையுங்கோ" முத்து எரிச்சல்.

"யோசிக்கிறதோ? எல்லாரும் யோசிக்க வெளிக்கிட்டால் சோக்காய்தானிருக்கும். தலைவர்மாரே இல்லாமல்போயிருப்பினம். யோசிக்கிற விசர் வேலையளை விட்டிட்டு வேறஏதேன் பிரயோசனமாய் பார். அது சரி உவன் ஞானம் தண்ணி வைக்கத்தானே குசினிக்குப் போனவன். திரும்பி வரவேயில்லை. என்னடா செய்யிறாய்?" பாலகுமார் கேட்டதற்கு குசினிக்குள்ளிருந்து எந்தப் பதிலுமில்லை.

"அவனும் வாழ்க்கையை வெறுத்துப்போட்டு பிளக் பொயின்றுக்கை கையைக் கீயை வைச்சுட்டானோ?" பாலகுமார் சந்தேகத்துடன் எழுந்து போனான்.

முத்து மறுபடியும் மண்டையைப் போட்டான். 'இதே கதியில போனால் திரும்பியும் விசராஸ்பத்திரிக்குத்தான் போகவேண்டிவரும். இதுக்கென்ன காரணம்? எதோடயும் ஒட்டாம இருக்கிறதுதானே? எதோட ஒட்டலாம்? தன்ரை தன்ரை அலுவலை பாக்கிறவன் கூட ஏதோ பிராக்காயிருக்கிறான். இதென்னடாவெண்டா எங்கடை அலுவலைப் பாக்கவே விசராயிருக்குது. எங்கடை அலுவலெண்டு ஏதேன் இருந்தாலெல்லோ! என்ன செய்யலாம்? புதுசா ஏதாவது செய்ய வேணும். என்ன செய்யலாம்?'

"புதுசா என்ன செய்யலாம்?" என்று கேட்ட முத்து அப்போதுதான் பாலகுமார் அங்கில்லாததைக் கவனித்தான். "டேய் பாலகுமார்"

www.tamilarangam.net

எங்கிருந்தும் பதில் வர வில்லை. 'என்ன மந்திர வித்தை யோ. குசினிக்குள்ள போனவங் கள் எல்லாரும் மாயமாய் ம றையிறாங்கள்' அதிசயித்தபடி முத்து எழுந்துபோய் குசினிக் கதவைத் திறந்து பார்த்தான்.

ஞானமும், பாலகுமாரும் சிலைகளாக நின்று ஜன்னல் கண் ணாடியினூடாக வெளியே எதை யோ பார்த்துக்கொண்டிருந்தா ர்கள். அவ்வப்போது தங்கள் மூ ச்சால் ஜன்னல் கண்ணாடியில் பு கார் படிந்துவிட, அதைத் தன்னி ச்சையாகத் துடைத்துக் கொண் டிருந்தார்கள். ஏனைய இடம் மு முவதையும் புகார் மூடியிருந்த து.

"டோய்" என்றான் முத் து. அவர்கள் அசைவதாயில்லை.

'அப்பிடியென்ன புதினம்' முத்துவும் ஜன்னலின் ஒரு பகுதி யைத் துடைத்துவிட்டுப் பார்த் தான்.

நேரெதிரேயுள்ள கட்டிட த்தில், இரண்டாம் மாடியில், ஒரு அறையில் இரண்டுபேர் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்துகொண் டிருந்தார்கள். லைற் போடப்ப ட்டிருந்ததால் அந்த உருவங்களு ம், அவற்றின் செய்கைகளும் துல் லியமாகத் தெரிந்தன. ஜேர்மெ னியர்கள். வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. போதாததற்குக் குடித்திருக்கலாம். பக்கத்திலே பிள்ளைகளே இருந்தாலும் கவ லைப்படப் போவதில்லை.

நீண்டநேர முத்தங்கள், அணைத்தல், உருளல், பிரளல்...

பார்த்துக் கொண்டிருந்த மூவரும் உஷ்ணமாகிக் கொண்டி ருந்தார்கள். நரம்புகள் வேறு முறுக்கேறிக்கொண்டிருந்தன.

அழைப்புமணி அடித்தபோ துதான் பார்வையாளர்கள் சுய நினைவுக்கு வந்தார்கள். "இஞ்ச முத்துவும் வந்துநிண்டு பாத்திருக் கிறான்" என்றான் பாலகுமார்.

"ஏன் எனக்கு மட்டும் இல்லையே?" முத்து சொல்லிவி ட்டுப் போய்க் கதவைத் திறந் தான்.

கீழ் ரூம் குமார். "கூவ ர் ஒருக்கா வேணும்"

"ஸ்ரோர் ரூமுக்கை . போய் எடு. என்ன இந்த நே ரம்?"

"இப்பதான் நேரமிருக் குது" எடுத்துக்கொண்டு போ னான்.

"இரவுச் சாப்பாடு? " மறுபடி ஆரம்பித்தான் பாலகு-மார். முத்து ஒவ்வொரு பாத்தி ரமாகத் திறந்து பார்த்தான். மத்தியானத்தின் மிச்சங்கள் இரு ந்தன. மா இல்லை. எப்போ தோ வாங்கிவைத்த றவை இரு ந்தது.

உப்புமா என்று சொல்லி கிண்டி எல்லாவற்றையும் கலந்து சாப்பிட்டார்கள்.

அடுத்தநாள் வேலையென் று சொல்லி முத்து சீக்கிரமே கட்டிலில் ஏறிப் படுத்துவிட்டான்.

www.tamilarangam.net

ஞானத்துக்கும், பாலகுமாருக்கும் நாளை வேலை இல்லை. ரி.வி. போட்டு ஆர்.ரி.எல். பிடித்தார்கள். படம் ஏதோ ஆரம்பமாகிப் போய்க் கொண்டிருந்தது. ஒரு கல்லூரி மாணவனும், மாணவியும் தனியாக ஒரு வீட்டுக்கு ஓடிப்போய் உடைகளைக் களைந்து.... முத்து தொடர்ந்து பாக்க விரும்பினாலும் நித்திரை வந்துவிட்டது.

இடையில் ஒருதரம் முத்து விழித்துப் பக்கத்துக் கட்டிலைப் பார்த்தபோது பாலகுமாரைக் காணவில்லை. இவனுடைய கட்டில் ஆடிக்கொண்டிருந்தது. முத்து கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தான். பாலகுமார் இல்லைத்தான். இந்த நேரத்தில எங்கபோய்த் துலைஞ்சான்? படுத்திருந்தபடியே தலையை மட்டும் கவிழ்த்துத் தன்னுடைய கட்டிலின் கீழ் கட்டிலைப் பார்த்தான்.

முதலில் குழப்பமாயிருந்தது. கண்கள் ஓட்டமெற்றிக்காகச் சரிசெய்துகொள்ள, காட்சி தெரிந்தது.

ஞானமும், பாலகுமாரும் ஒருவர் மேல் ஒருவர்...... அவர்களுடைய கைகள் செயலாற்றிக்கொண்டிருந்தன.

முத்து தலையை எடுத்து போர்வையால் போர்த்துக் - கொண்டு மறுபடி படுத்தான். நித்திரை வரவில்லை. ' இவங்கள் எத்தினை நாளாய் இப்பிடி..?

கட்டில் நீண்டநேரம் மெலிதாக ஆடிக்கொண்டேயிருந்தது.

இதன் பின்னரும் பலநாட்கள் முத்து இருவரையும் அவதானித்துவந்தான். ' இதுக்கென்ன காரணம்? '. தானும் சில சமயங்களில் தனியாகத் தன்னுடைய கைகளால் செயற்பட்டதை முத்து மறந்துவிடவில்லை. ' இப்பிடியேபோனால் ஆபத்து. வக்கிரமாகப் போறம். நிப்பாட்டியே ஆகவேணும். என்ன செய்யலாம்

என்ன செய்யலாம்?

என்ன செய்யலாம்??

தொடர்ந்து பல நாட்கள் முத்து தனக்குள் கேட்டுக் - கொண்டிருந்தான். ' வாழ்விலை ஒரு பிடிப்பில்லாமல்.. எல்லாத்திலயும் வெறுப்பாயிருக்கிறது... தனிமையை உணர்றது... இது எல்லாத்துக்கும் தொடர்பிருக்குது. சாப்பாடு குடுக்காம கூண்டிலை அடைச்சி வைச்சிருக்கிற மிருகங்களைப் பட்டினி போட்டா அதுகள் ஒண்டையொண்டு சாப்பிற மாதிரி... எங்களை அடைச்சு...!!'

முத்து வேலை செய்யும் பக்ரறிக்குப் புதிதாக ஒருவன் வந்து சேர்ந்தான். கொஞ்சநாட்கள் பழகியபின் முத்துவுக்கு அவனைப் பிடித்துக்கொண்டுவிட்டது.

உருத்திரன். தூர நகரத்திலிருந்து வேலைக்கு வந்துகொண்டிருந்தான். அவன் வைத்திருக்கும் பாக்கில் எப்போதும் புத்தகங்கள் இருக்கும். தாடியில்லை.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## 01.01.91 வீரகேசரி

லண்டனிலிருந்து கிட்டுவால் பிரேமதாசவுக்கு டிசம்பர் 30ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதமும் புலிகளின் டிசம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட யுத்த அறிவிப்பு பிரகடனமும், அரசாங்கத்தின் நிலைப்பாடும் பதிவு பெற்ற அரசியல் கட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கம் யுத்த நிறுத்தம் பற்றி அக்கறை கொண்டதாகவோ, அலட்டிக்கொண்டதாகவோ தெரியவில்லை. அப்படி அக்கறை கொண்டு இது தொடர்பாக மேற் கொண்டு ஏதும் நடவடிக்கை எடுக்குமெனவும் நம்பவில்லை - அரசபேச்சாளர்.

## 02.01.91 வீரகேசரி

தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்குமாறு கோரி லங்கா பொதுச் சேவையாளர் சங்கம் அனுப்பிவைத்த கடிதத்திற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்காகக் கடன் பெற முடியாது என தோட்டத் தொழிலமைச்சர் பதிலளித்துள்ளார்.

## 03.01.91 வீரகேசரி

படுவான்கரைப் பகுதிக்கு உணவு எடுத்துச் செல்லப்படாததால் 9 அகதி முகாம்களிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

## 04.01.91 வீரகேசரி

இந்நாட்டு சகல இனமக்களும் எந்தக் கட்சி அரசியலைக் கொண்டிருந்தாலும் சகலரையும் ஒன்றிணைத்து ஆட்சி புரிவதே பிரேமதாசவின் அபிலாசையாகும் - சுகாதார மகளிர் விவகார அமைச்சர்

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள் வெலிக்கடைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## 05.01.91 வீரகேசரி

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டதுமில்லை. இப்போது மேற்கொண்டுவருவதும் இல்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய எல்லா அரசியற்கட்சிகளும் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள விசுவாசமும், நம்பிக்கையும் அரசிற்கு அளித்துவரும் ஆதரவும் இதற்குச் சான்று பகர்கின்றன - ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையிலிருந்து.

யுத்த நிறுத்தத்தை நாம் வரவேற்கவில்லை. ஜனாதிபதியைச் சந்திக்கும்போது இதனை எடுத்துச் சொல்வோம். புலிகளுக்கு ராணுவத் தளபாடங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் அவர்களின் பங்கர்கள் நிறைந்து கிடக்கின்றன. அவசியமற்ற யுத்தத்தினால் மக்களின் வெறுப்பு அவர்களுக்கு எதிராக மாறியுள்ளது. மாங்குளம் தாக்குதலில் சுமார் 400 புலிகள் - கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் உலகத்திற்கு மறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக புலிகள் வட்டாரத்திற்குள்ளேயே பாரிய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது - ஈ.பி.டி.பி.

ஆண்கள், பெண்கள் வயது வித்தியாசமின்றி வவுனியாவில் காணமற் போவது அதிகரித்துள்ளது. இதுவரையில் இவ்வாறாக 50பேர் காணமற்போயுள்ளனர். கைது செய்யப்படுபவர்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

– வீரகேசரி

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்புவது குறித்து இலங்கையரசுடன் இந்தியா தொடர்பு கொண்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இயல்பு நிலையை கொண்டுவருமுகமாக இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்தத்தைக்கடைப்பிடிக்கும் என்றும், தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் விசுவாசமாக எதிர்பார்க்கிறது என்று புலிகளின் மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்களைக் கடத்துவது, பாலியல் பலாத்காரப்படுத்துவது, கைது செய்வது போன்ற செயல்களில் இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகள்–அரசு யுத்த நிறுத்தம் பற்றி–

வடக்கிலும், கிழக்கிலும் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டால் தப்பாக்கியை எதிர்நோக்கும் நிலையில்லாமல் சகல மக்களும் அப்பகுதிகளில் சுதந்திரமாக நடமாட முடியுமா? எல். ரி. ரி. ஈ. யின் யுத்தநிறுத்தம் இலங்கைப் படையினருடனானதாக மட்டும் அமையக்கூடாது – தமிழ் காங்கிரஸ்

புலிகள் தமது பாசிசக் கொள்கையைக் கைவிடவேண்டும். ஆயுதங்களை கீழே வைக்கவேண்டும். சனநாயக நீரோட்டத்தில் புகுந்து கொள்ளவேண்டும்– ஈ.பி.டி.பி.

ஆயுதத்தைக் கீழே வைத்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் – புளொட்

யுத்த நிறுத்தத்தை இந்தியாவின் அமைதிகாக்கும்படை ஒன்று கண்காணிக்கவேண்டும்:– ஈ.என்.டி.எல்.எவ்.

தனிநாட்டுக் கொரிக்கையை எல். ரி. ரி. ஈ. பகிரங்கமாகக் கைவிடாதவரை யுத்த நிறுத்தத்தை அரசு ஏற்கக்கூடாது –மு.காங்கிரஸ்

யுத்த நிறுத்தம் சகல அரசியல் கட்சிகளுக்கும், அவற்றின் உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பொருந்தக்கூடியதாக அரசு பார்த்துக்கொள்ளவேண்டும். ஆயுதங்களுடன் எல். ரி. ரி. ஈ. நடமாடக்கூடாது– ஈ.பி.ஆர்.எல்.எவ்.

புலிகள் தனிநாட்டு கோரிக்கையை கைவிட்டு இலங்கையின் ஒருமைப்பாட்டை ஏற்கவேண்டும். ஆயுதங்கள் யாவற்றையும் கையளிக்கவேண்டும்– ம.ஐ.மு

06.01.91 வீரகேசரி

இந்தியக்கடலோர எல்லையில் இந்தியக்கடற்படையின் ரோந்து நடவடிக்கை மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளது.

07.01.91 வீரகேசரி

இலங்கை இராணுவத்தினர் பட்டிப்பளை, அரசடித்தீவு என்ற கிராமங்களின் மக்களை அவர்களுக்கு வெள்ளநிவாரணம் வழங்கப்பட இருக்கிறதென்று நம்பும்படி செய்து கொக்கட்டிச்சோலை இராணுவமுகாமுக்கு அழைத்துச் சென்றனர். இப்படி அழைத்துச்செல்லப்பட்டவர்களில் – பெரும்பாலான ஆண்கள் பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

09.01.91 வீரகேசரி

இலங்கை ஆயுதப்படையினரால் பாரிய யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களும், ஆத்திரமூட்டுட் செயல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு வழிசமைக்குமுகமாக யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது என்று புலிகளின் தலைமைப்பீடம் முடிவுசெய்திருப்பதாக புலிகளின் மக்கள் முன்னணி அறிக்கை வெளியிட்டுள்ளது.

கட்சி அரசியலிலிருந்து இனப் பிரச்சினையை விடுவித்து நாட்டுக்குப்பெரும் அனர்த்தங்களை விளைவிக்கும் அப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வொன்றை வகுப்பதற்கு இணங்குமாறு சமூக–சமய நடுநிலையம் பிரேமதாசவுக்கும், சிறிமாவோவுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. ஆட்சி செய்த ஐ.தே.க.வும், சு.க.வுமே தற்போதைய நிலவரத்திற்கான முழுப்பொறுப்பையும் கூட்டாக ஏற்கவேண்டும் என்று குறிப்பிட்ட இச்சங்கம், இலங்கைப் பிரஜா

www.tamilarangam.net

வுரிமைச்சட்டம், சிங்களம் மட்டும்
சட்டம், பண்டா-செல்வா ஒப்
பந்தம் கிழித்தெறியப்பட்டமை, டட்
லி-செல்வா உடன்படிக்கை கைவிட
ப்பட்டமை, மாவட்ட அபிவிருத்திச்ச
பைகள் சட்டத்தை முறையாக அமு
ல்செய்யத் தவறியமை, அரசியலமை
ப்புக்கான 6வது திருத்தம் என்று
நிரல்படுத்தி தமிழ் இளைஞர்கள் ஆ
யுதம் ஏந்தும் சூழ்நிலை உருவாவத
ற்கான காரணத்தை விளக்கியுள்ளது

2, 3 வாரங்களில் அல்லது 2, 3
மாதங்களில் எல்.ரி.ரி.ஈ.ஐ முடி
த்தே தீருவோம். நான் கையேற்ற
வேலையை பாதியில் நிறுத்தியதே
கிடையாது. ஐ.தே.க., சு.க. ஆ
கிய கட்சிகளில் முஸ்லீம்கள் சேர
லாம். இனவாதக் கட்சிகளில் சேர
கூடாது- பாதுகாப்பமைச்சர்

புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறு
த்தப் பிரகடனம் பிரேமதாச அர
சை புதியதொரு நெருக்கடிக்குள்
தள்ளிவிட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய
பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வை
யும் வழங்கக்கூடிய ஆற்றல் இந்த
அரசாங்கத்திற்கு அறவேயில்லாத-
தால் இந்த யுத்த நிறுத்தநிலையும்
எந்தவொரு தீர்வுக்கும் வழிவகுக்க
முடியாது. இன்றைய அரசாங்கத்தை
தூக்கியெறியுமுகமாக வெகுஜனஇய
க்கம் ஒன்றை கட்டியெழுப்ப அர
சாங்கத்திற்கு விரோதமான சகல
சக்திகளுடனும் புலிகள் ஐக்கியப்பட
வேண்டும் - ந.ச.ச.க.

10.01.91. வீரகேசரி

ஜப்பான் அரசு இலங்கைக்கு1150
கோடி 55 இலட்சம் ரூபாவை ச
லகைக் கடனைகவும், 12கோடிரூபா
வைக் கடன் நிவாரண உதவியாகவு
ம் வழங்குகிறது.

12.01.91 வீரகேசரி

யுத்த நிறுத்தத்தை இனிமேல் நீடிப்
பதில்லையென்றும், புலிகளுடன் இனி
மேல் பேச்சுவார்த்தை நடத்துவத
தானால் அது புலிகளின் இராணுவப்
பிரிவுடனேயே மேற்கொள்ளப்படும்
என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது

அம்பாறை மத்திய முகாம் பகுதியி
லுள்ள 11ஆம் இலக்கத் தமிழ்க்குடி
யேற்றக் கிராமத்தில் 8 மனிதத்
தலைகள் அடையாளம் காணமுடியா
தவாறு அரைவாசி எரிந்தநிலையில்
காணப்பட்டன. இராணுவத்தினரும்,
ஊர்க்காவற்படையினரும் நிலைகொ
ண்டுள்ள காவல் நிலையத்திலிருந்து இ
சுமார் 300யார் தொலைவில்
ந்தத் தலைகள் காணப்பட்டன.

1985 யூன் மாதம் நால்வர் அட
ங்கிய குழுவொன்று ராடர் வாங்கு
வதற்காக இஸ்ரேலுக்குச் சென்றது
சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தி
ணைக்கள அங்கீகாரத்துடன், பாது-
காப்பமைச்சு பயணத்திற்கான செ
லவுகளை ஏற்றுக்கொண்டது -மொ
ஸாட் விசாரணை ஆணைக்குழு முன்
பாதுகாப்பமைச்சின் செயலாளர்
சாட்சியம்.

தமிழக அரசுக்கு வழங்கப்படும் த
கவல்கள் யாவும் யாழ்ப்பாணத்திலு
ள்ள புலிகளுக்குப் போய்ச் சேரு
வதாக இந்தியப் பிரதமர் குற்றம்
சாட்டியுள்ளார்.

ஒன்றரைத் தொன் தங்க நாணயங்க
க்குப் பேரம் பேசி மெக்சிகோவி
லிருந்து பருத்தித்துறைக்கு ஆயுதங்க
ளைக்கொண்டுவருவதற்கு புலிகள் ந
டவடிக்கை எடுத்துள்ளார்கள். நீர்
மூழ்கிக் கப்பல்கள் மூலமே இவற்-
றை அங்கிருந்து அனுப்பி வைக்கவும்
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

15.01.91 வீரகேசரி

ஜூன் மாதம் அசம்பாவிதங்கள் ஆ
ரம்பித்ததிலிருந்து மட்டக்களப்பு -
மாவட்டத்தில் 1576பேர் காணும
ற்போயிருப்பதாக சமாதானக்குழு
விடம் புகார் செய்யப்பட்டுள்ளது.
காணமற் போனவர்களின் பெற்றோ
ரும் உறவினரும் தங்களது பிள்ளைக
ளைத் தேடி நாளாந்தம் ஒவ்வொ
ரு முகாமுக்கும் அலைந்து திரிகின்ற
னர்.

16.01.91 வீரகேசரி

இலங்கை பாதுகாப்புப் படையினர்
இராணுவ நடவடிக்கைகளை மீறத்
தொடங்கியுள்ளபோதிலும் ஒருதலை
பட்சமான யுத்தநிறுத்தத்தை தாங்
கள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்-
போவதாகவும், இலங்கை அரசுடன்
நிபந்தனைகள் எதுவுமின்றி பேச்சு
வார்த்தையைத் தொடங்கத் தயா
ராயிருப்பதாகவும் புலிகள் அறிவித்
துள்ளனர்.

இந்நாட்டில் இளைஞர்கள் மத்தியில்
புரட்சி ஏற்பட்டு சுமார் 12
0இளைஞர்கள் சிறை வைச்
ருக்கிறார்கள் - வர்த்தக
துறை அமைச்சர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

17.01.91 வீரகேசரி

யாழ்நகரில் இடம்பெற்ற குண்டுத்-தாக்குதல்களினல் 10பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

18.01.91 தாயகம்

மாசி மாதத்திற்குள் மேலும் 5 ஆயிரம் படைவீரர்கள் பயிற்சியளிக்கப்பட்டு அரசு படைக்குள் சேர்க்கப்படுவார்கள். இராணுவப் பயிற்சி நிலையங்களில் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இதனல் அரசபடைகளின் எண்ணிக்கை 1 இலட்சத்திற்கும் மேல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இராணுவத்தின் எண்ணிக்கை 60 ஆயிரமாகும்.

ஏன் நாங்கள் இலங்கையரசுடன் யுத்தம் செய்வதை நிறுத்திஞேம் என்பதையும், மீண்டும் யுத்தம் ஆரம்பித்தோம் என்பதையும் மக்கள் அறிய வேண்டிய கட்டாயம் உண்டு. மக்களுக்கு இது குறித்து எந்த விடயமும் தெரியாது – புலிகளின் வானெலியில் யோகி

மட்டக்களப்புப் பகுதியில் புலிகளின் பண வசூல் தொடர்ந்து நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் குடும்பத்தின் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளவர்களிடம் குறைந்தபட்சம் 1 இலட்சம் ரூபா கேட்கப்படுகிறது.

மாவீரர் தினத்தில் போட்டப்பட்ட கொட்டகைகள் பல தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்தினக் காலம் முழுவதும் அனைத்து கொட்டகைகளுக்கும் துப்பாக்கி ஏந்தியபடி புலிகள் காவல் இருந்தார்கள் என்றும், இக்கொண்டாட்டம் புலிகள் எதிர்பார்த்தபடி மக்கள் ஆதரவையும், பங்களிப்பையும் பெறவில்லையென்றும், பவுண் வாங்கும் – போது காட்டும் அச்சுறுத்தல்களும் பொறுப்பின்மையும் பரவலான வெறுப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், ஆங்காங்கே முகாம்களில் மக்கள் மௌனமாக வெறுப்பைக் காட்டியதாகவும், 'பாசிசப் புலிகள்ஒழிக' என்ற துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டதாகவும், சுவர் எழுத்துகள் காணப்பட்டதாகவும் தெரிகிறது

20.01.91 வீரகேசரி

வளைகுடாவிலிருந்து அமெரிக்கப் படையுட்பட ஏனைய அந்நியப்படைகள் வாபஸ் பெறவேண்டுமென கோஷமிட்டுக் கொண்டு ஊர்வலம் சென்ற கூட்டத்தை கொம்பனித் தெருவில் வைத்து பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்து கலைத்தனர்.

கிழக்கில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினல் வெளியே வந்த பாம்புகள் கடித்து 50க்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளார்கள்.

21.01.91 வீரகேசரி

புலிகளின் யுத்த நிறுத்தம் பற்றிப்-பேசுவதற்கு அரசு சர்வகட்சிகளையும் அழைத்தது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கல்ல. தாங்கள் தப்பித்து கொள்வதற்கே – ச.ச.க.

சாமிமலை மீரியாக் கோட்டைப்பகுதியில் காலாகாலமாக வாழ்ந்து வரும் சுமார் 150 மலையகக் குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறும், இல்லையேல் இராணுவத்தினரின் உதவியுடன் அப்புறத்தப்படப்போவதாகவும் அப்பகுதி கிராமசேவகர் மிரட்டியுள்ளார்.

22.01.91 வீரகேசரி

கன்னன்குடாவைச் சேர்ந்த சிவநேசதுரை என்பவர் இனந்தெரியா – தோரால் கடத்தப்பட்டபின் அவரது சடலம் காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டது.

23.01.91 வீரகேசரி

வல்வெட்டித்துறையில் ஆகாயமார்க்கமாக இலங்கைப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 7 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 23பேர் காயமடைந்தனர்.

சர்வதேச சமுதாயத்தின் கவனமெல்லாம் வளைகுடாவின் பக்கம் இருக்கும் நிலையைப் பயன்படுத்தி இலங்கையரசு இராணுவ வெற்றியைக் கானத் தடியாய் தடிக்கிறது– புலிகள்

யாழ் மாவட்டத்தில் கர்ப்பிணித்தாய்மார்கள், சிசுக்களின் மரணங்கள் அதிகரித்து வருகின்றன. அண்மைக்காலத்தில் மாத்திரம் இம் மாவட்டத்தில் 18 கர்ப்பிணித் தாய்மார்கள் இறந்துள்ளனர்.

கோட்டைக் கல்லாறு, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் 2 பெண்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

7ஆம் கொலனி பாடசாலை ஆசிரியை ஒருவர் ஊர்க்காவற்படையினரால் பாலியல்பலாத்காரப்படுத்தப்பட்டபின் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில தினங்களின் பின் மரணமானார்.

24.01.91 வீரகேசரி

கடந்த 1 வாரகாலமாக கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் 200 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். 30 ஆயிரம் பேர் அகதிகளாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் மகாஓயாப் பொலிஸ் பகுதியில் குடியேற்றக் கிராமம் ஒன்றில் பெண்கள்,குழந்தைகள்,ஆண்கள் என 27 பேர் புலிகள் எனக் கருதப்படுபவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

வளைகுடா போர் தொடர்பாக கூட்டங்கள்,ஊர்வலங்கள்,ஆர்ப்பாட்டங்கள் நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.

25.01.91 வீரகேசரி

குடாவல்ல கிராமம் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு 300பேர் விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பிரதி வருடமும் இந்த நாட்டில் பாடசாலைப் படிப்புகளை முடித்துக் கொண்டு 3 இலட்சம் மாணவ,மாணவியர் வெளியேறுகிறார்கள். இவர்களில் 1 இலட்சம் பேருக்கே அரசாங்கம் தொழில் வாய்ப்புகளை வழங்கிவருகிறது. எஞ்சிய 2 இலட்சம் பேருக்கும் வேலை இல்லாத நிலையே ஏற்படுகிறது.— நிதியமைச்சர்

ஒரு தமிழ்க்குழுவுடனான மோதலையே அரசாங்கத்தால் சமாளிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அனைத்து தமிழர் குழுக்களும் அரசுக்கெதிராக களத்தில் இறங்கினால் முடிவு தனிநாடுதான் — சி.ம.க

26.01.91 வீரகேசரி

25 நாள் போர் நிறுத்தத்தை உடனடியாகக் கைவிடுவதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வளைகுடாவில் 9 நாடுகளில் மொத்தம் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 343 இலங்கைத் தொழிலாளர்கள் உள்ளனர்.

கடந்தவாரம் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் 200க்கு மேற்பட்டோர் — கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரம் பேர் அகதிகளாகியுள்ளனர். இது போன்ற பெரும் விமானக் குண்டுத் தாக்குதல் வல்வெட்டித்துறையை தரைமட்டமாக்கியதுடன் கிளிநொச்சி விமானக்குண்டுத் தாக்குதலில் 25க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுவிஸ் வங்கி போன்று இலங்கையில் 8 வங்கிகளுக்கு வெளிநாட்டவர்களுக்கு மட்டும் இரகசியக் கணக்கு — வைப்பு வழங்குவதற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. ஆசியாவிலேயே முதன்முறையாக இலங்கையிலேயே இத் திட்டம் அமுல்படுத்தபடவுள்ளது.

27.01.91 வீரகேசரி

மட்டக்களப்பு ஆரையம்பதியில் கமலாதேவி என்ற பெண் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஈரோஸைச் சேர்ந்தசிலர் எம்.பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கின்றனர். முன்பு எம்.பி.க்களாக இருந்து ராஜினாமா செய்தவர்களோடு ஈரோஸ் முக்கியஸ்தர்கள் வேறு சிலரும் எம்.பி. க்களாகச் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

28.01.91 வீரகேசரி

அம்பாறை மாவட்டத்தில் கந்தசாமி என்ற சலவைத் தொழிலாளி கொல்லப்பட்டு அவரது சகோதரர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விமானப்படைக் ஹெலிக்கொப்டர் களும், போர் விமானங்களும் குண்டுத்தாக்குதல்களை நடத்தியதில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கிழக்குப்பல்கலைக்கழகம் அண்மையில் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. அங்கிருந்த பெறுமதிமிக்க தளபாடங்கள் அனைத்தும் லொறிகளில் ஏற்றப்பட்டு வெளிமாவட்டத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

கிழக்கில் படைகளின் முகாம் அமைந்திருந்த பாடசாலைக் கட்டிடம் ஒன்றின் சுவரில் "நாம் இங்கு வந்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருப்பது தமிழரின் இரத்தத்தைக் குடிக்கத்தான்" எனச் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது.

29.01.91 வீரகேசரி

கிளிநொச்சி கன்கபுரத்தில் குண்டு வீச்சினால் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். 11பேர் காயமடைந்துள்ளனர்.

ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டோம் என்று கூறிக்கொண்டே இன்றும் பல ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களுடன் திரிகின்றன. அகதி முகாம்களில் ஆட்திரட்டல் நடக்கிறது. கொழும்பிலுள்ள அகதி முகாமொன்றிலிருந்து அகதியொருவர் வெளியேறிச்செல்வதென்றால் கப்பம் கட்ட வேண்டியுள்ளது.

தனி ஈழம் கேட்டவர்கள் எல்லோரும் இன்று வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை, வத்தளை பகுதிகளிலே பாதுகாப்பாக வாழ்ந்துவருகிறார்கள். ஆனால் மக்களோ வடக்கு, கிழக்கு அகதிமுகாம்களிலே அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

குருநாகலிலுள்ள முஸ்லீம் அகதிமுகாம்களுக்கு பஸ் வண்டிகளை எடுத்துச் சென்ற உதவி அதிபரும், பொலிசாரும் அவற்றில் ஏறி மன்னாருக்குச் செல்லுமாறு அகதிகளைப் பலவந்தபடுத்தியுள்ளனர். பாதுகாப்பில்லாமல் தாம் மன்னார் செல்ல முடியாதென அகதிகள் கூறியபோது உங்களுக்கு நிவாரணப் பொருட்கள் கிடைக்காது என அதிகாரிகள் கூறியுள்ளனர். புலிகளின் கைகளால் மடிய நாம் தயாராயில்லை. இங்கேயிருந்து பட்டினி கிடந்து சாவோம் என அகதிகள் கூறிவிட்டனர்.

சாதாரண உடையில் நள்ளிரவு வேளைகளில் தோட்ட லயன்களுக்குச்சென்று சோதனை நடத்தும் பாதுகாப்புப்படையினர் காரணங்கள் எதுவுமின்றி இளைஞர்களைக் கைது செய்து வருகின்றனர். அடையாள அட்டை இல்லாதவர்கள் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

"செய்திக் குறிப்பு"வில் இடம்பெறும் சுருக்கங்களின் விளக்கங்கள். ஏதாவது தவறவிடப்பட்டிருப்பின் குறிப்பிட்டு எழுதுங்கள்.

01. ஐ.தே.க – ஐக்கிய தேசியக் கட்சி.
02. சு.க. – சுதந்திரக் கட்சி.
03. ந.ச.ச.க– நவ சமசமாஜக் கட்சி.
04. ல.ச.ச.க– லங்கா சமசமாஜக்கட்சி
05. ஐ.சோ.மு– ஐக்கிய சோசலிசமுன்னணி.
06. ம.ஐ.மு – மக்கள் ஐக்கிய முன்னணி.
07. ம.க – மக்கள் கட்சி
08. ஜே.வி.பி – மக்கள் விடுதலை முன்னணி
09. டி.ஜே.வி – தேச பக்த மக்கள்முன்னணி
10. கொ.க. – கொம்யூனிஸ்ட் கட்சி.
11. மு.கா – முஸ்லீம் காங்கிரஸ்.
12. இ.தொ.கா– இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்.
13. ஐ.தொ.கா– ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ்.
14. ம.ம.மு – மக்கள் மலையக முன்னணி.
15. ம.தொ.மு– மலையகத் தொழிலாளர் முன்னணி.
16. தோ.தொ.யூ– தோட்டத் தொழிலாளர் யூனியன்.
17. பு.மா.க – புரட்சிகரமார்க்கிஸயக் கட்சி.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பார்வை

26.01.91 சனிமாலை பேர்லின், மேரிங்கோல் எனும் இடத்தில் மலையக இலக்கிய கர்த்தா என்.எஸ்.எம். இராமையா நினைவோடும், அறிமுகத்தோடும் "ஒன்றுகூடல்" ஆரம்பித்தது. சுமார் 70 பேரளவில் கலந்துகொண்டனர்.

"நமக்கிடையேயான முரண்பாடுகளும், எமது நகர்வுகளும்" என்ற கருத்தரங்கை சுசீந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

மௌனமே அனைத்துக்கும் சௌகரியமானதும், ஆபத்தற்றதும்... என்று தமிழ் மக்கள் மீது ஆயுத ஆசான்கள் திணித்த கோட்பாடுகளின் தாக்கம் இங்கும் ஆதிக்கம் செலுத்துவதைக்–காணக்கூடியதாகவிருந்தது. ஆயினும் அதை உடைத்த முதல் மனிதக் குரலாக தெய்வேந்திரன் துணிச்சலான கருத்துகளை முன்வைத்தார்.

இவரைத் தொடர்ந்து – மௌனம் உடைந்து முரண்பாடுகள் களைகட்டின. எதையுமே உடைப்பதற்கும், மாற்றுவதற்கும் ஒருவர் முதலில் துணியவேண்டும்!

"அங்கே பிரச்சினை, மாமா ஆமி சுட்டுச் செத்துப்போனார், இங்கே ஒரு கூட்டம், கவிதை.." என்னும் மனநிலையும், முணுமுணுப்பும்,

"அமலா, மோகன் வரும்போதோ, அப்புக்குட்டி, மரிக்கார் வரும்போதோ, சுசீலா, ஜேசுதாஸ் வரும்போதோ இலங்கையில் பிரச்சினையே இல்லை! ஒரு மலையக எழுத்தாளனின் நினைவாகக் கூடும்போது மாத்திரம் இலங்கையில் பிரச்சினை" எனும் கோஷம்,

## ஓர் ஒன்றுகூடல்

www.tamilarangam.net


இவையெல்லாம் சனங்கள் விழிப்படைந்தால் தங்கள் இருப்புகளை இழந்துவிடுவோம் என்னும் பயத்தினால் சனங்களைத் தூக்கத்திலேயே வைத்திருக்க நினைப்பவர்களின் மிரள்பாடு... போன்ற கருத்துகள் பரஸ்பரம் பரிமாறப்பட்டது. ஜெயசிங்கம், தனபால் ஆகியோரும் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். இப்படியான கலந்துரையாடல்கள் அடிக்கடி நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை உணரக் கூடியதாகவிருந்தது.

இதன் தொடர்ச்சியான கவிதா நிகழ்வை றஜீன்குமார், பாமினி ஆகியோர் நிகழ்த்திக் காட்டினர். பாமினி படித்த "அரிவரி படிக்கிறேன்" கவிதை காரசாரமான பாதிப்பை ஏற்படுத்தியது என்பதை அடுத்த நாலைந்து நாட்கள் காதில் விழுந்த விமர்சனங்கள் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது.

றஜீன்குமாரின் கவிதைகள் முன்னுரை அதிகரித்திருந்ததினாலோ, 'மைக்'கினாலோ, வேகத்தினாலோ இவரின் முன்னைய கவிதா நிகழ்வைவிட குறைந்தளவு பாதிப்பையே ஏற்படுத்தின. இனிவரும் கவிதா நிகழ்வுகளுக்கு முன்னர் றஜீன்குமார் ஒத்திகை பார்த்துக்கொண்டாரானால் நிகழ்ச்சியின் தரத்தைத் தொடர்ந்து பேணிக்கொள்ள முடியும்.

அடுத்து பெர்லினில் வசிக்கும் கௌரிதாஸின் "புதிய விடியல்கள்" கவிதை நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. தமிழர்களின் 10ஆண்டுகால பெர்லின் வாழ்க்கையில் ஒரு நூல் அறிமுகம் செய்வதற்கும், இலக்கியவாதி ஒருவரை நினைவு கூர்வதற்கும் ஒன்றுகூடியது இதுவே முதற்தடவை.

நூலைப் பற்றிய அறிமுகத்துடன் தனது விமர்சனத்தை ஆரம்பித்த சுசீந்திரன் "சாதாரண விருப்பினால் 'நன்றாக இருக்கிறது' என்றோ அல்லது தனித்த வெறுப்பினால் 'இது நன்றாக இல்லை' என்றோ எழுந்தமானமாக ஒரு ஆக்கதாரருக்கு அவருடைய ஆக்கத்தைப் பற்றிச் சொல்வதை விட்டு, அவரின் ஆக்கத்தினூடே இதை இன்னும் இப்படிச் செய்திருந்தால் நன்றாக



இருந்திருக்கும் என்று காரண, காரிய ரீதியாக விமர்சிப்பதே மேலும் காத்திரமான படைப்புகளைக்கொண்டுவரும்" என்றும் "தனித்த வடிவத்துக்குள்ளும், மொழியின் அழகுக்குள்ளும், அதீத தனி உணர்வுகளுக்குள்ளும் சிக்கிக் கொள்ளாது படைப்புகள் பொதுமைப்படுத்தப்படும்போது அது நீண்ட ஆயுளைப் பெற்றுவிடுகிறது" என்றும் தெரிவித்தார்.

றஜீன்குமார் விமர்சித்தபோது, "புதிய விடியல்கள் எனும் தலைப்பினூடாகவும், முன்னுரையின் ஊடாகவும் தான் இந்த நூலின் உள்ளே நுழைந்தேன். முன்னுரை என்பது ஒரு நூலின் முகவரி. நூலில் கூறப்பட்டுள்ள –

www.tamilarangam.net

சேதி சகராவைப் பற்றியதென்று முன்னுரை கூறும்போது மயிலிறகு தேடுவதற்கு செல்லும் ஆட்களுக்கு அங்கே வேலை இல்லை என்னும் வைரமுத்துவின் முன்னுரை வரிகளை இங்கே பொருத்திப்-பார்க்கலாம். கௌரிதாஸினுடைய முன்னுரையினூடாக நான் சகாராவைத் தேடி நடந்தேன். இடையில் காலடியில் சில மயிலிறகுகள் சிக்குப்பட்டன. கௌரிதாஸின் அடுத்த ஆக்கங்கள் காத்திரமானவையாக வரவேண்டும் என்று வேண்டுகிறேன்" எனத் தெரிவித்தார்.

விமர்சனங்களுக்குப் பதிலளித்த கௌரிதாஸ் " உங்கள் ஆக்கங்கள் நன்றாக இருக்கின்றன என்று நூறு பேர் சொல்வதைவிட, எப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று வழிகாட்டும் ஒரு விமர்சகரையே நான் எதிர்பார்த்திருந்தேன். கவிதைகள் எழுதும் எவரும் சமூகப் பிரச்சினைக்கு முகங்கொடுக்காது எழுதமுடியாது. எனது அடுத்த ஆக்கங்கள் விமர்சனங்களைக் கவனத்திலெடுத்து வரும்" என்றார்.

விமர்சனங்களைக் கிரகிக்கும் கௌரிதாஸின் பக்குவம் அடுத்து நல்ல படைப்பு வரும் என்ற நம்பிக்கையைத் தரும்படி இருந்தது.

"போர் எதிர்ப்புப் பாடல்கள் என்பது போராட்ட எதிர்ப்புப் பாடல்கள் அல்ல. யுத்தம் யாரால், எதில் அக்கறை கொண்டு நடாத்தப்படுகிறது என்பதை இன்று உலகமே அறியும். இப்படியான யுத்தங்களின் எதிர்ப்புக் குரலாகவே இப் பாடல்கள்" என்ற முன்னுரையுடன் ஆரம்பிக்கப்பட்ட இசை நிகழ்ச்சியில் பாமினி பாடிய "அண்ணாமாரே, அக்காமாரே.." என்ற மழலைப் பாடல் நன்றாக இருந்தது. நல்ல பாடல் பாமினியின் குரல்வளத்தால் இன்னும் பொலிவுபெற்றது.

டானியலின் சில பாடல்கள் மிக நன்றாக இருந்தன. ஏனைய பாடல்களை குரல் விழுங்கிவிட்டது. பாடும்போது இவர் மெல்லுவதைவிட்டுவிட்டு குரலை உயர்த்திப் பாடினால் ஒரு ஆக்கபூர்வமான பாடகன் எம்மிடையேயென்று நாங்கள் சந்தோசபட்டுக்கொள்ளலாம்.

இறுதியாக, "10 வருடத்தில் ஆக்கபூர்வமான நல்ல நிகழ்ச்சி" என்று முணுமுணுத்தபடி கூடியவர்கள் அடுத்த தடவை சந்திக்கும்வரை பிரிந்து சென்றார்கள்.

கட்டுப்பெட்டித்தனங்களும் காடை கடைப்புளித்தனங்களும் தலைதூக்காத ஒரு நல்லசபையைச் சந்தித்த திருப்தியுடன் — (பிரான்ஸ் தமிழர்கள் கவனிக்க!) நானும் பிரிகிறேன்.

www.tamilarangam.net

ஈழத்திலிருந்து:

# தேசத்தின் நரிப்புகள்

- பிரஜைகள் -

யாழ்ப்பாணம் திரும்பிப் போவதா இல்லையா என்ற முடிவை எடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதாக நான் சென்றதடவை அறிமுகப்படுத்திய புதிய நண்பர் திடீரென்று ஒரு செய்தியுடன் என்னிடம் ஓடிவந்தார்.
கொழும்புக்கு வந்துவிட்டால் நிம்மதி என்று நம்பி அங்கிருந்து கஷ்டப்பட்டு வந்து சேர்ந்தபோதும் அவருக்கு நிம்மதி இருக்கவில்லை. முதலாவது காரணம் எங்கே யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற யுத்தத்தில் தனது குடும்பமும் அகப்பட்டு ஏதாவது நடந்து விடுமோ என்ற துக்கம். இரண்டாவது காரணம் கொழும்பில் தங்கிநிற்பதற்கான சரியான காரணத்தைக் கூற முடியாமல் இலங்கை அரசின் பொலிசாரிடம் மாட்டுப்பட்டு விடுவோமோ என்ற பயம். இந்த இரண்டு காரணங்களும் அவரை நிம்மதியற்றுத் தவிக்க வைத்துக் கொண்டிருந்தன.

நண்பரை கடைசியாக நான் சந்திப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் திடீரென கொழும்பில் புலிகள் வந்துவிட்டார்கள் என்று கூறி லொட்ஜ்களிலும், றூம்களிலும் தங்கியிருந்த பலரை சந்தேகத்தின் பேரில் இலங்கை அரசு தள்ளிக்கொண்டு போயிருந்தது. அவர்களை இப்போதைக்கு விடவேண்டாம் என்றும், நிதானமாக அதுபற்றி யோசிக்கலாம் என்றும் அரசின் மேல்மட்டத்தினர் உத்தரவிட்டிருந்தார்களாம். அந்தக் கைது செய்யப்பட்ட நபர்களுள் பிறநாடுகளுக்குச் செல்லத் தயாராக டிக்கட் வைத்திருந்தவர்களும் அடங்குவர். அவர்கள் எவ்வளவோ சொல்லியும் எதையும் கேட்காத பொலிஸ் பிடிபட்டவர்களின் உறவினர்களையும் பார்க்க அநுமதிக்க மறுத்துவிட்டு அனைவரையும் மகா தடுப்பு முகாமில் போட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

கடைசியாகச் சந்தித்தபோது ஊருக்குப்போகவா விடவா எனத் தீர்மானிக்க முடியாதபடியால் இடையில் ஒரு தடவை இந்தியா போய் வருவோமா என யோசிப்பதாகச் சொல்லியிருந்தார் அவர். இந்தியா போக காசுக்கு என்ன செய்யப்போகிறார் என்று கேட்டதற்கு, தனக்கு டிக்கட் காசு இருந்தால் போதுமென்றும் இந்தியாவில் தனக்குச் செலவுக்குப் பணம் தேவையில்லை, உறவினர்கள் இருக்கிறார்கள் என்றும் சொன்னார். டிக்கட் காசை எப்படியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'ஒகனைஸ்' பண்ணலாம் என்று சொல்லிவிட்டுச் சென்றவர் பிறகு என்னைச் சந்திக்கவில்லை.

இம்முறை அவர் என்னைச் சந்திக்க வந்ததும், "ஏன் இந்தியாவிற்குப் போகவில்லையா?" என்று கேட்டேன் நான். அவர் அதற்குப் பதில் சொல்லாமல் அதைவிட்டு முக்கியமான ஒரு செய்தியுடன் தான் வந்திருப்பதாகச் சொன்னார். "என்ன செய்தி?" என்றேன் நான்.

"புலியள் போர் நிறுத்தத்தை அறிவிக்கப் போறாங்களாம்"
"ஏன்? என்ன நடந்தது?" என்றேன் நான். எனக்கு நம்பமுடியவில்லை.
"தெரியவில்லை. ஆனால் புலியளோட நெருங்கிய தொடர்புள்ள ஒருவர் எமக்குச் சொன்னார். தங்களது சொந்தப் பலவீனம் ஒரு காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்தானே?" என்றார் நண்பர்.
"அது சரி, அப்படி போர் நிறுத்தத்தினை திடீரென அறிவிப்பதற்கு என்ன காரணம் சொல்லப் போகிறார்களாம்?"
"அதுதான் தெரியேல்லை. எனக்குச் சொன்னவருக்கும் தெரியேல்லை. பொதுவா எல்லாச் சனங்களும் தற்காலிகமாகவேனும் ஒரு அமைதியான இடைவெளி தேவை என்று சொல்லுகிறதாலை அப்பிடிச் செய்யலாம் என்று யோசிக்கிறாங்கள் என்று அவர் சொன்னார்".
"அப்பிடியெண்டால் முதல் அரசாங்கம் கேக்கேக்கை செய்திருக்கலாமே?"
"அரசாங்கம் எப்ப கேட்டது? ஆயுதங்களைப் போட்டுவிட்டுப் பேசவரும்படிதானே சொன்னது? அது ஏலாதுதானே? அரசாங்கம் முதல்லை தாங்கள் இராணுவ ரீதியாக ஒரு மேல்நிலையை அடைந்த பிறகு பேசலாம் எண்டுதானே- அறிவிச்சது. அதுக்கு புலியள் தயாராக இருக்கேல்லை. இப்ப கோட்டையையும் பிறகு மாங்குளத்தையும் அடிச்சாப்பிறகு சிலவேளை இப்படிக் கேட்டால் அரசாங்கத்தின்ர நிலை எப்பிடி என்று பார்க்கலாம் என்றும், அதற்கு அரசாங்கம் மறுத்தால் அதை அம்பலப்படுத்தலாம் என்றும் அவர்கள் யோசிக்கிறார்களாம்..."

எனக்கு நம்பமுடியாமல்தான் இருந்தது. முதலில் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு உண்மையில் புலிகளே காரணமாக இருந்தார்கள். புலிகள் அரசுடன் யுத்தம் செய்வது தவிர்க்கமுடியாதது என்ற ஒரு நிலை உருவாகமுதலே - அப்படி ஒரு நிலைமை 14 மாதகால அவர்களின் பேச்சில் உருவாகியே இருக்காது என்பது வேறு விசயம்! சண்டையைத் தொடங்கினார்கள். அதற்குச் சொன்ன காரணங்கள் எவையும் அவ்வளவுக்குச் சரியான காரணங்களாகத் தெரியவில்லை. சிலவேளை பாலசிங்கம் 'ஹிந்து' பேப்பருக்குச் சொன்னது மாதிரி, சமாதானநிலை ஒரு பொறியாக புலிகளை அரசியல் அந்தரநிலைக்குத் தள்ளினதுதான் உண்மையான காரணமாக இருக்கக்கூடும்.

எப்படியோ யுத்தத்தைத் தொடங்கிய பிறகு அதைத் தாங்கள் நினைத்ததுபோல வெற்றிகரமாகச் சாதிக்க முடியாத நிலையில் தான் புலிகள் இருந்தார்கள். மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் என்று எல்லாவற்றையும் இழக்கவேண்டி ஏற்பட்டு விட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பாதுகாப்பதே பெரிய சிரமப்பட்டுத்தான் செய்யவேண்டி இருந்தது. ஆமி வசாவிளானுக்கே - மிகக் கஷ்டப்பட்டுப் போட்ட பெரிய பங்கர்களையும் தாண்டி - வந்து விட்டது.

கோட்டை, மாங்குளம் தாக்குதல்களில் பெரும் வெற்றிபெற்ற போதும், வெற்றிதோல்வியற்ற ஒரு நிலைமை நீடிக்க மட்டுமே சாத்தியம்; இரு சாராரும் வெல்லப்

www.tamilarangam.net

போவதில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. இதைப் புலிகள் புரிந்து கொண்டிருக்கக் கூடும். அதனால் பேச்சு வார்த்தைக்கு அழைக்க ஒருவேளை முயன்றிருக்கலாம் என்றும் தோன்றியது.

ஆனாலும் இப்படித் திடீரென்று யுத்த நிறுத்தத்தைத் தன்னிச்சையாக அறிவிக்க முன்வருவார்களா என்று நம்பமுடியாமலே இருந்தது. இன்னமும்.

"உன்னால் எவ்வளவு நிச்சயமாக இதைச் சொல்ல முடியும்" என்று கேட்டேன்.

"எனக்குச் சொன்னவருடைய தகவலை நிச்சயம் நம்பலாம். ஏன் இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? ஏற்கனவே லண்டனில் பேச்சு நடப்பதாகச் சொல்லப்பட்டது தெரியும்தானே?" எனக் கேட்டார் நண்பர்.

"அது எவ்வளவு தூரம் ஒரு தீர்க்கமானதாக இருந்திருக்க முடியும் என்று சொல்லமுடியாது. அரசாங்கம் அதை அங்கீகரிக்காதது மட்டுமல்ல அதை மறுத்தும் வந்துள்ளது."

"எப்படியோ போர் நிறுத்தம் அறிவிக்கப்படப் போவது மட்டும் நிச்சியம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இதை அரசாங்கம் ஆதரிக்குமா என்பதுதான் தெரியவில்லை."

அரசாங்கம் தானே உருவாக்கியுள்ள இந்தச் சிக்கலிலிருந்து மீளுவது அவ்வளவு லேசானதல்ல என்று எனக்குப் பட்டது. 'தேசபக்தி' என்ற பேரில் சிங்கள இன வெறியையும் இராணுவ வெற்றிபற்றிய கற்பனைகளையும் வளர்த்துவிட்டு வீரம் பேசுகிற இந்த அரசு அவ்வளவு இலேசில் அதைக் கைவிடுவது சாத்தியமில்லை என்றும் தோன்றியது. ஆயினும் அது முடியுமா என சிலவேளை முயன்று பார்க்கக்கூடும் என்றும் நினைத்தேன்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை மொத்தத்தில் முன்னேறி இருந்தாலும் உடனடியாக உள்ள நிலை தோல்வியே என்பதால் உடனே சம்மதிக்கப் பின்வாங்கிக்கொண்டுதான் ஏதாவது செய்யும் என்று சொன்னேன். அவரது மனதிலும் அத்தகைய கருத்துக்களே ஓடிக்கொண்டிருந்தனபோலும். அவர் மௌனமாக ஆமோதித்துவிட்டு, "நான் இந்தியா போற விசயம் சரிவராது" என்று சொன்னார்.

"ஏன் காசு 'ஒகனைஸ்' பண்ண முடியேல்லையோ?" என்றேன் நான்.

"காசு இல்லை பிரச்சினை. விசா தரமாட்டானாம்"

"ஏன்?"

"யாழ்ப்பாணத்தானுக்கு விசேஷமாக இல்லையாம். யாழ்ப்பாணத்தான் எல்லோருமே புலி எண்டதுதான் அவங்கடை நினைப்பு போல. மட்டக்களப்பு ஆக்களுக்கும் முஸ்லிமாக்களுக்கும் எண்டால் குடுக்கிறாங்கள்"

"ஏன் எண்டு கேக்கேல்லையே?"

"கேட்டனான். போறதுக்குக் காரணம் கேட்டான். சொன்னன். முடியாதாம். முக்கியமான காரணம் இருந்தால்தான் விடுவானாம்... காசு இழக்கினால் எடுத்திருக்கலாம். அப்பிடிக் கனபேர் போனவங்கள்", என்று அங்கலாய்த்தார் அவர். காசு இல்லாததையிட்டு அவருக்குக் கவலையாக இருந்தது.

"அவன் முக்கியமான காரணமெண்டு எதைச் சொல்கிறான்?"

"கடவுளுக்குத்தான் வெளிச்சம். 'ஆனால் நீங்கள் அங்கைபோய் என்ன செய்வியளோ தெரியாது' எண்டு சொன்னான்"

"எண்டால்...."

"எண்டால் என்ன? இயக்கம் எண்டு நினைச்சிட்டான் போலை. நான் கேட்டன், ஏன் புலியெண்டு யோசிக்கிறியோ? எண்டு"

"ஆ... என்ன சொன்னான்?"

"ஒண்டும் சொல்லாமல் தோளைக் குலுக்கினான். யாருக்குத் தெரியும்

www.tamilarangam.net

எண்டது போலை. எனக்குப் பத்திக் கொண்டு வந்துது. 'அவங்கள் எண்டால் இங்கை வந்து உன்னைக் கேட்டுக்கொண்டு நிக்கமாட்டாங்கள். முக்காமணித்தியாலத்தில போட்டில போய் இறங்கியிடுவாங்கள். உங்களுக்கு கொழும்பில வந்து நேர்மையாகக் கேட்கிற ஆக்களைத்தான் மறுக்கத் தெரியுது. ஆனால் கோடிக்கரையிலயும், வேதாரணியத்திலையும் ஒண்டும் பண்ணயேல்லைதானே!' எண்டிட்டு திரும்பி வந்திட்டன். எழிய ராஸ்கலுகள்"
என்றார் அவர்.

எனக்குச் சிரிப்பு வந்தது. "இலங்கை அரசுக்கும் சிங்கள தேசபக்தர்களுக்கும் எல்லாத் தமிழர்களும் புலியள்; இந்திய அரசுக்கோ யாழ்ப்பாணத்தான் எல்லாரும் புலியாய்ப் போனாங்கள்" என்று எனக்குள் முணுமுணுத்துக் கொண்டேன்.

சொல்லியபடியே மூன்று நாட்களில் விடுதலைப் புலிகள் திடீரென்று யுத்தநிறுத்தத்தை அறிவித்தார்கள். அரசாங்கம் அது தொடர்பாக எந்த அபிப்பிராயமும் தெரிவிக்காமல் 'நிலைமையை அவதானிப்பதாக' அறிவித்தது. பிறகு எல்லா எதிர்க் கட்சிகளையும் கூட்டி ஆலோசித்துவிட்டு முதல் ஒரு வாரம் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க ஒப்புக் கொண்டது.

இந்த ஒருவார காலத்துள் புலிகள் 34 யுத்த நிறுத்த மீறல்களைச் செய்ததாக அறிவித்து திரும்பவும் யுத்தத்தை ஆரம்பித்து விட்டது. தமது சொந்தப் பலவீனத்தை மூடிமறைக்கவும், இழந்த செல்வாக்கை நிலைநாட்டவும், தம்மை ஆயுத ரீதியாக தயார்ப்படுத்த அவகாசத்தைத் தேடிக்கொள்ளவே புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்கள் என்று அரசு தனது யுத்த நிறுத்தத்தை முடித்துவைத்த அறிக்கையில் அறிவித்திருந்தது. புலிகளின் இந்த யுத்த நிறுத்தத்தை பூரண யுத்த நிறுத்தமாக மாற்றவும், பேச்சுவார்த்தையைத் தொடரவும் பின் எதிர்க்கட்சிகள் அறிவித்த அபிப்பிராயங்களையும் தொகுத்து அரசு சில முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்தது.

1. பேச்சு வார்த்தைக்கு முன்னர் அனைத்து ஆயுதங்களும் கீழே போடப்படவேண்டும்.
2. புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து பணயக் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டும்; யுத்த நிறுத்தம் அரசுடன் மட்டுமல்லாமல் பிற இயக்கங்களுடனும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
3. பேச்சுவார்த்தையில் பிரபாகரன் பங்குபற்ற வேண்டும். அரசியல் பிரிவுடன் இனி பேசுவதில் பயனில்லை.

இவற்றைவிடவும் இன்னும் சில கோரிக்கைகளையும் வேண்டுகோள்களாக அரசு முன்வைத்துள்ளது. யுத்த நிறுத்தம் தமிழ்மக்களின் இன்னல் காரணமாக அவர்களுக்கு நிவாரணம் தேவை என்பதை மையமாகக் கொண்டு அறிவிக்கப்பட்டதென புலிகள் அறிவித்திருப்பதால் இவற்றையும் அது செய்யவேண்டுமென புலிகளிடம் அரசு கேட்டது.

* பணயக் கைதிகளை விட்டுவிடல்; மேலும் பணயக் கைதிகளை பிடிக்காதிருத்தல்,
* மரண தண்டனை வழங்கல், சித்திரவதை செய்தல் என்பவற்றை நிறுத்தல்,
* கண்ணிவெடி அகற்றுவதற்குப் பொதுமக்களைப் பயன்படுத்துவதை நிறுத்தல்,
* 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களையும், குடிமக்களையும் யுத்தசேவைக்கு ஆள் சேர்ப்பதை நிறுத்தல்,
* பழிவாங்கல்களை நிறுத்தல்; யுத்தக் கைதிகளைக் காண அநுமதி அளித்தல்;

என்பனவே அந்தக் கோரிக்கைகளாகும்.

www.tamilarangam.net

இவற்றைப் பத்திரிகைகளில் படித்தபோது எனக்குத் திடீரென அரசாங்கத்தின் நோக்கம் புரியவில்லை. யுத்த நிறுத்தத்தை முடிவுசெய்து யுத்தத்தில் இறங்கியவுடன் திடீரென அது வவுனியாவில் முதலாவது தாங்குதலைத் தொடங்கியும் விட்டது. நான் எனது நண்பரிடம் போனேன்; இதுபற்றிப் பேசலாம் என்ற நினைப்புடன்.

இம் முறையும் அவர் ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார். ஆனால் இது முன்னதைப் போலல்லாமல் ஒரு அரசியல் கடிதம். யாரோ ஒரு நண்பரால் வெளிநாட்டிலிருந்து அவருக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் அது. 'படித்துப் பார்' என்று அதை என்னிடம் நீட்டினார் நண்பர். கடிதம் மூன்று முக்கியமான கேள்விகளை எழுப்பியிருந்தது.

முதலாவது கேள்வி: புலிகளைத் தேசிய சக்திகளாக வரையறை செய்வதும் அவர்களது போராட்டத்தை தேசியவிடுதலைப் போராட்டமாகவும் வரையறை செய்வதும் சரியா?

இரண்டாவது கேள்வி: புலிகளின் தவறுகளை அம்பலப் படுத்தி விமர்சிப்பது சரியா? அல்லது அப்படிச் செய்வது இலங்கை அரசைப் பலப்படுத்தும் என்று சொல்லிக் கொள்வது சரியா? அதன்மூலம் புலிகளைப்பற்றி எதுவுமே பேசாமல் இருப்பது சரியா?

மூன்றாவது கேள்வி: இவ்வளவு பிழையான ஒரு இயக்கம்தான் எமது போராட்டத்துக்குத் தலைமையாக வந்ததற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? அல்லது நாம்தான் பிழையாக யோசிக்கிறோமா?

கடிதத்தின் சாரத்தை இப்படி மூன்றாகப் பிரிக்கலாம் என மனதுக்குள் யோசித்துக் கொண்டு நண்பரைப் பார்த்தேன். அவர் இது பற்றி ஏற்கனவே யோசித்து விட்டிருந்தாரா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அவரிடம் ஏதோ கருத்து இருக்கிறது என்பது மட்டும் தெரிந்தது.

"கடிதத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றார் நண்பர்.

"நினைக்க என்ன இருக்கிறது? இது பொதுவாக எல்லாருக்கும் உள்ள பிரச்சனை போலத்தான் படுகிறது. இங்கேயும் பலரிடம் இப்படிக் குழப்பங்கள் இருக்கத்தானே செய்யுது" என்றேன் நான்.

"இதைக் குழப்பம் என்று சொல்வதைவிடக் கேள்விகள் என்று சொல்ல வேண்டும். இவை எமது போராட்டத்தில் தீர்க்கப்படாத கேள்விகளாக உள்ளன. அதனால்தான் இவை எல்லா இடமும் வெவ்வேறு வடிவங்களில் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கின்றன....."

"இதைக் கேட்டவர் புலிகளை அம்பலப் படுத்துவது சரியா என்று கேட்கிறார். ஆனால் அப்படிக் கேட்பதில் அர்த்தமில்லை. இது குழப்பமில்லாமல் வேறென்ன? தவறுகளை அம்பலப்படுத்தாமல் என்ன செய்வது?" என்றேன் நான் கொஞ்சம் எரிச்சலுடன்.

"அப்படி மொட்டையாகச் சொல்லேலாது. அம்பலப்படுத்திறதா இல்லையா எண்ட பிரச்சனை புலிகளைப்பற்றிய மதிப்பீட்டினைப் பொறுத்தது. அதுமட்டுமல்ல எங்கடை போராட்டம் பற்றிய மதிப்பீட்டையும் பொறுத்ததுதான்."

"புலிகளைப்பற்றி மதிப்பிட என்ன இருக்கு.... என்ன, நீயும் அவர்களைச் தேசிய சக்திகள் என்று நினைக்கிறாயா?.... தேசபக்தி இவர்களிடம் இருக்குதெண்டு

www.tamilarangam.net

நினைக்கிறாயா?.... இவங்கள் சந்தர்ப்பவாதிகள் என்று நீயே சொல்லியிருக்கிறாய்..." என்றேன் நான்.

புலிகளை தேசபக்த சக்திகள், தேசியவாதிகள் என்று கூறுகிற ஒரு கருத்து பரவலாக அடிபட்டு வருகிறதும், இக் கருத்துள்ளவர்கள் புலிகளை இன்றைய நிலையில் நாம் பலப்படுத்த வேண்டும் என்று கூறிவருவதையும் நான் அறிவேன். ஆனால் இந்த நண்பர் அப்படிச் சொன்னதில்லை. ஆனால் அவர்களை விமர்சித்து வந்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியும். இன்று அவர் பேசிய விதம் வியப்பாக இருந்ததால் இப்படிக் கேட்டேன். புலிகளுக்கு தேசத்தின்மீது பக்தி இருப்பதாக நம்புவதற்கு கஸ்டமாகத்தான் இருக்கிறது என்பது அவருக்குப் புரிந்திருக்க வேண்டும்.

அவர் சிரித்துக் கொண்டு சொன்னார், "சந்தர்ப்பவாதிகள் என்பது உண்மை. ஆனால் அது அவர்கள் தேசியசக்திகள் அல்ல என்று சொல்லப் போதுமானதா? ‘தேசியசக்தி' என்ற சொல்லால் நீ எதை விளங்கிக் கொள்கிறாய் என்பதைப் பொறுத்தது இது. பலர், ‘தேசியசக்தி'யா இல்லையா என்பதை, தேசவிடுதலைப் போரில் ஈடுபடுகிற ஒருவரது போராட்ட வழிமுறையிலிருந்து ஆராய்கிறார்கள். அப்படியான ஆய்வுமுறை தவறானது என்றே நான் நினைக்கிறேன்"

"எனக்குப் புரியவில்லை", நான்.

"ஒருவரது ‘தேசியத்தன்மை' அவரது வர்க்கம், வர்க்க உணர்வு சார்ந்தது. ஒரு ஸ்தாபனத்திற்கும் இது பொருந்தும். வர்க்கத்தின் இயல்புக்கேற்ப இது உறுதியாகவும், ஊசலாடுவதாகவும், காட்டிக் கொடுக்கக்கூடியதாகவும் கூட அமையலாம். காட்டிக் கொடுக்கிற, துரோகமிழைக்கிறவர்களை விட்டுவிடுவோம். மற்றவர்களை எடுத்தால் அவர்களது ‘தேசியத்தன்மை' அவர்கள் சார்ந்துள்ள வர்க்க நிலையோடு மாறுபடுவதைக் காணலாம். அவர்களது வர்க்க நிலைக்கேற்ப அவர்களுடைய போராட்ட வழிமுறையும் அமையும். போராட்ட வழிமுறை ஒருவரது வர்க்கநிலையைக் காட்டும். தவறான போராட்ட வழிமுறையே ஒருவரை தேசியத்தன்மை அற்றவர் என வரையறை செய்யப் போதுமானதல்ல. அப்படி என்றால் சிவகுமாரன் முதல் இன்றுவரை இறந்த பல போராளிகள் யாரும் தேசியத்தன்மை அற்றவர்கள் ஆகிவிடுவர்"

"அது சரி, சுத்திச்சுத்தி நீ புலிகளை ‘தேசியத்தன்மை' கொண்டவர்களாகக் கூறவருகிறாய், அதுதானே?"

"அப்படிச் சொல்வதில் ஒரு சிறப்புமிருப்பதாக நான் நினைக்கவில்லை. அது ஒரு உண்மை அவ்வளவுதான். நீயும் உன்னைப்போல பலரும்தான் அதை ஒரு ‘சிறப்புப்பட்டம்' ஆகக் கருதி அப்படி அல்ல என அடித்துப் பேசி வருகிறீர்கள். எமக்கு உண்மை முக்கியமே ஒழிய எமது மன விருப்பங்களல்ல முக்கியம்!"

"நல்ல உண்மைதான். அவர்களில என்னதான் தேசியத் தன்மையை நீ கண்டுவிட்டாய்?"

"தமிழீழத்தைப் பெறும்வரை போராடுவதாக உறுதியாக நிற்பது"

"உனக்கு இண்டைக்கு புத்தி பிசகி விட்டுதோ? அவங்கள் எங்கே உறுதியாக நிண்டாங்கள். இப்பவே ‘பெஃடரல்' அமைப்புக்குத் தயாராக இருப்பதாக தெரிவித்திருக்கிறாங்களே...."

"அது அவர்களுடைய தேசியத் தன்மையையோ உறுதியையோ சந்தேகத்துக்குள்ளாக்கேல்லை. மாறாக அவர்களது ‘தேசியத்தன்மை' என்ன என்பதை தெளிவாக்கியிருக்கிறது."

"எண்டால்?"

"அவர்களிடம் ஒரு தேசியத்தன்மை இருக்கிறது. அதை அவர்கள்

www.tamilarangam.net

விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அது பேரம்பேசுதலுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆனால் துரதிஷ்டவசமாக அதை (பேரத்தை) செய்யுமளவுக்கு விட்டுக் கொடுக்க அரசு ஒருபோதும் தயாரில்லை; அது இந்த அரசுக்கு ஒருபோதும் முடியாது."

"அப்ப அவர்களை தேசியத்தன்மை கொண்டவர்கள் என்றுதான் சொல்கிறாய்."

"ஆம்.... அவர்களுக்கு ஒரு 'தேசியத்தன்மை' உண்டு."

"அப்ப அவங்கடை யுத்தமும் தேசிய விடுதலை யுத்தம் தான்."

"அப்படி நான் நினைக்கவில்லை. இது ஒருவகை தடுப்பு யுத்தம் மட்டுமென்றே நான் நினைக்கிறேன்."

"பிறகென்ன குழப்பம்?"

"குழப்பமில்லை. இதுவும் இன்னொரு உண்மை. இந்த யுத்தம் தேசத்தை விடுதலை செய்யாது. எதிரிக்கு எதிரான தடுப்பு யுத்தமாகமட்டுமே இது இருக்கும். அதற்குமேல் அதை வளர்த்தெடுக்க புலிகளின் 'தேசியத்தன்மை' பலமற்றது."

"தடுப்பு யுத்தம் தாக்கும் யுத்தமாக மாறி விடுதலை யுத்தமாக பரிணமிக்கும் என்பார்களே?"

"விடுதலை எது என்பதைப் பொறுத்தது அது. புலிகளின் 'விடுதலைக்கு' அந்த சாத்தியம் இல்லை. அல்லது புலிகள் விடுதலை பற்றிய தமது கருத்தை மாற்றி அமைக்கவேணும்...."

"இது புலிகளின் 'தேசியத்தை'விடக் குழப்பமாக இருக்குது. உண்மையைக் கதை. நீ என்னதான் சொல்லிறாய்?"

"தடுப்புயுத்தம் விடுதலை யுத்தமாக மாறுறதெண்டால் அது மக்கள் யுத்தமாக மாறவேணும். அப்படி மாறுவதென்றால் இது - தமது - விடுதலைப் போராட்டம் என்ற உணர்வு மக்களுக்கு வரவேண்டும். அப்படி வர, அவர்கள் அந்த அரசியலினூடாக பயிற்றப்பட்டு வரவேண்டும். இது அப்படி வரவில்லையே. எனவே ஒரு மக்கள் யுத்தமாக இது மாறும் வாய்ப்பு இல்லை. அதைவிட முக்கியமான நிபந்தனை மக்கள் யுத்தத்திலுண்டு. ஐக்கிய முன்னணி. அதுவும் சாத்தியமில்லை. எனவேதான் அப்பிடிச் சொன்னேன். இதில என்ன சிக்கல் இருக்கு?"

"அப்ப இந்த யுத்தத்தை நாங்கள் ஆதரிக்க வேணும்; அதாவது புலியளை ஆதரிக்க வேணும் எண்டதுதானே உன்ரை கருத்து?" என்று கேட்டேன் நான்.

"ஓம், ஆனால் ஆதரவு என்பதும் வேறை; ஆக்கபூர்வமான பங்களிப்பு எண்டதும் வேறை"

"அதாவது புலியிலை சேராமல் புலியை வெளியிலை இருந்து ஆதரிப்பாய் அதுதானே?"

"ஆதரவு புலிக்கல்ல; போராட்டத்துக்கு."

"போராட்டத்தை நடத்தியது புலியள்தானே? புலியில்லாமலே போராட்டம் நடக்குது?"

"போராட்டத்தை நடத்திறது புலிதான். ஆனால் நடத்திற தடுப்பு யுத்தத்தை ஆதரிப்பது புலியை ஆதரிப்பது ஆகாது. மாங்குளம் தாக்குதலை ஏற்கலாம்: நடாத்திய புலிகளை ஏற்பது கடினம். ஏனென்றால் அது பிற கருத்துக்களின் சுதந்திரம் பற்றிய பிரச்சினையாக உள்ளது. ஜனநாயகம் பற்றிய பிரச்சினையாக உள்ளது."

"அப்ப நீ சொல்றதுதான் என்ன? எல்லாம் குழப்பமாயிருக்கே. புலியள் செய்யிறது சரி, புலியள் சரியில்லை எண்டே சொல்லுறாய்?"

"புலியள் செய்யிறதும் சரியெண்டு நான் சொல்லவில்லை."

"ஐயோ, எனக்குத் தலை வெடிக்கப் போகுது!"

"வெடிக்கட்டும். அப்பதான் மூளையிலை காத்துப்படும். நீயும் கொஞ்சம் நிதானமாய் யோசிப்பாய். புலிகள் செய்வதை நான் சரியெண்டு சொல்லவில்லை. அவர்கள் செய்யிறது தமிழ் மக்களுக்கு விடுதலையைத் தருமெண்டும் நான் நினைக்கேல்லை. ஆனால் அவர்களின் 'தேசியத்தன்மை'யைப் பொறுத்து அவர்களது நடவடிக்கையிலும் நாம் ஏற்கக்கூடிய

www.tamilarangam.net

விடயங்கள் உண்டு என்றுதான் நான் சொல்கிறேன்...."
"ஆக, நீ சொல்கிற தேசிய விடுதலைப் போராட்டமும் தேசிய விடுதலையும் வேறை. அவர்கள் சொல்வது வேறை. நீ சொல்கிற பாதை வேறை. அவர்களது பாதை வேறை. அவர்கள் சரியானதை அடையப் போவது இல்லை; சரியானதையே செய்வதும் இல்லை. ஆனாலும் அவர்களது நோக்கமும்கூட நீ சொல்வது போன்றதாகவே இருப்பதால் அவர்களும் நீ ஏற்கக்கூடிய விடயங்களை இடைக்கிடை செய்ய வாய்ப்புண்டு..."
"கிட்டத்தட்ட சரி. ஆனால் எனதும் அவர்களதும் நோக்கம் ஒன்றல்ல."
"அப்ப?"
"அவர்களது விடுதலை அவர்களது அரசியல் நிலைப்பினைச் சார்ந்தது. எமது விடுதலை எமது அரசியல் நிலைப்பைச் சார்ந்தது. நாம் முழுமக்களையும் அனைத்து ஒடுக்கு முறையிலிருந்தும் விடுவிக்க நினைப்பவர்கள். அவர்கள் அப்படி நினைக்கவில்லை. மக்களை ஒடுக்குவதையும், தமது விடுதலையையும் ஒரு சேர செய்ய நினைப்பவர்கள். ஆனாலும் அவர்களது விடுதலையும் நமது விடுதலை நோக்கில் ஒரு அங்கம் என்பதால் நாம் விமர்சன பூர்வமான ஆதரவு தரவேண்டும் என நினைக்கிறேன்."
"அப்ப அதுதான் அவர்களை மற்றக் கட்சிகள் அழிக்க நினைப்பதை நீ ஏற்கவில்லை என்று சொன்னனியோ?"
"ஓம்."
"சரி, அப்ப அவர்களின் தவறுகளை அம்பலப்படுத்தலாமா?"
"நிச்சயமாக, அந்தத் தவறுகள்தான் அவர்களது பலவீனங்கள்"
"பலவீனத்தை அம்பலப்படுத்துவது சரியா?"
"வேறு வழியிலான அணுகுமுறைகட்கு உகந்தமாதிரி நடைமுறை அரசியலை அவர்கள் கடைப்பிடிப்பதில்லை. ஆனால் இந்த அம்பலப்படுத்தல் அவர்களை சிந்திக்கவோ, நிர்ப்பந்திக்கவோ செய்யும் விதத்தில் அமைதல் வேண்டும்."
"E.P.D.P'யும், 'ரெலோவும்' செய்யும் பிரச்சாரம் அரசுக்கு உதவுவதுபோல, புலிகளை அம்பலப் படுத்துவது அரசுக்கு உதவாதா? அரசைப் பலப்படுத்தாதா?"
"அது செய்கிற விதத்தைப் பொறுத்தது. இருவருமே எதிரிகள் என்ற அடிப்படையில் அம்பலப் படுத்துவது; அரசை நண்பனாகவும் புலியை எதிரியாகவும் காட்டி அம்பலப்படுத்துவது; எதிரி பயன்படுத்தாத விதத்தில் புலியை அம்பலப்படுத்துவது என மூன்று வழிகள் உண்டு. இதில் மூன்றாவது வழிதான் நல்லது. இரண்டாவதே பிற தமிழ்க்கட்சிகளுடையது. இவர்களால் புலியை அம்பலப்படுத்த முடியாது. மாறாகத் தாங்களே அம்பலப்பட்டுப் போவார்கள்."
"அதெப்படி எதிரி பயன்படுத்தாத விதத்தில் செய்வது?"
"முதலில் எதிரி அரசு என்பதையும் புலி தவறிழைக்கும் ஒரு அரசியல் இயக்கம் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். தவறுகளை மக்கள் முன் வைக்கும் போது எதிரி பற்றிய மயக்கம் வராமல் இருப்பது எமது நிலைப்பாட்டின் வெளிப்பாட்டில் தங்கியுள்ளது. எதிரி பயன்படுத்துவது என்பது மக்களிடம் சொல்வதுதானே? நாம் சொல்லும்போதே அதைத் தெளிவாக்கிவிட்டால் பிறகு எப்படி அவன் பயன்படுத்த முடியும்?"
"ஆனால் அவனது பிரச்சார சாதனம் பெரிது"
"உண்மை. ஆனால் போராட்டமும் போராட்ட இயக்கங்களும் ஒரு நாளில் அந்த அளவுக்கு வளர்ந்துவிட முடியாதே!"

நான் கொஞ்சநேரம் மௌனமாக யோசித்தேன். இந்தப் பிரச்சினை எனக்கும் நீண்டநாட்களாக இருந்து வருகிறது. புலிகள் தமது போராட்டத்தில் இடையிடை ஊசலாடினாலும் சில விடயங்களில் உறுதியாக நிற்பதை மறுக்க முடியாது. ஒன்று ஆயுதங்களைக் கைவிடாதது,

www.tamilarangam.net

இன்னொன்று குடியேற்றங்களை அனுமதிக்காதது. மூன்றாவது வடக்கு கிழக்கில் அரசினதோ, இந்தியாவினதோ ஆதிக்கத்தை அனுமதிக்காதது. இவை மூன்றும் அவர்களது சொந்த நலனுக்காகச் செய்யப்படும் செயல்கள் என்று சொன்னாலும், அந்தச் சொந்த நலனில் தமிழ் மக்களின் நலனும் பிணைந்து இருப்பது மறுக்கமுடியாததுதானே?

'சொந்தநலன்' என்பதுகூட ஒரு 'சிந்தனை' அடிப்படையாகத்தானே வருகிறது. எமது நண்பரின் வார்த்தையிற் சொன்னால் இது புலிகள் தமது வர்க்கத் தன்மைக் கேற்ப தமிழ் மக்களின் தன்னாதிக்கம் பற்றிக் கொண்டிருக்கும் நிலைப்பாடு என்று சொல்லலாம்.

குழு நலன் என்று எதிர்க்கின்ற பிற கட்சிகள் தமது குழுக்களின் நலன்கள் எப்படி மக்களுக்குத் துரோகமிளைத்தன என்பதைச் சிந்திப்பதில்லை. ஆக புலிகளின் நலன்களை மட்டுமே சுட்டிக்காட்டி அதற்காகவே அவர்கள் இப்படி நடக்கிறார்கள் என்று வாதாடுகிறார்கள். எல்லாக் குழுக்களுடைய நலன்களும் ஏதோ ஒரு விதத்தில் சில வர்க்கங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவையே. புலிகளின் ஜனநாயக விரோத, மக்கள் விரோதச் செயல்களைப் பிரதானப் படுத்தும் இவர்கள், இதைவிட மோசமாகப் போகமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லையே.

ஆனால் அதேவேளை புலிகளின் 'தேசியத்தன்மை'யும் ஜனநாயக விரோதப் போக்கும் எப்படி ஒன்றாக இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நண்பரிடம் இதையும் கேட்டு வைத்தேன்."

"இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேனின் ஈராக்கிய அரபு தேசிய வாதத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? 'தூண்டிலு'க்கு எழுதிய குறிப்பில் ஒப்பிட்டு எழுதி இருந்ததால் கேட்கிறேன்." என்று பதில் கேள்வி கேட்டார் நண்பர்.

எனக்குப் பேசமுடியவில்லை. சதாமின் தேசியவாதம் உள்நாட்டில் எவ்வளவு காட்டுமிராண்டித் தனமாக அவன் இருந்தான் என்பதாலோ அமெரிக்காவுடனோ, ரஷ்யாவுடனோ அவன் தொடர்பு வைத்திருந்தான் என்பதாலோ தீர்மானிக்கப் படவில்லையே."

"ஆக, தேசிய வாதத்திற்கும், மக்கள் விரோத, ஜனநாயக விரோதப் போக்குக்கும் உறவு இருப்பது இயல்பே என்று சொல்கிறாயா?"

"அப்படி அல்ல. நான் முன்னரே சொன்னபடி எந்தவகையான தேசியவாதம் என்பதைப் பொறுத்தது இது. முதலாளித்துவ தேசியவாதம் எப்போதும் இப்படி இரண்டு போக்குகளையும் கொண்டதுதான். அது அதன் வர்க்க இயல்பு; அதன் காரணமாகவே அதனிடம் ஊசலாட்டம் இருக்கும். இன்னும் சரியாகக் கவனித்தால் அது முன்னேற முடியாமல் தடுமாறுவதற்கும் அதுதான் காரணம். முதலாளித்துவ தேசியவாதத்தில் முரணற்ற ஜனநாயகம் கிடையாது."

"அதென்ன முரணற்ற ஜனநாயகம்?"

"அது தனக்கு ஜனநாயகத்தைக் கோருகிறது. ஆனால் தனக்குக் கீழ்ப்பட்ட வர்க்கங்களுக்கு ஜனநாயகத்தை மறுக்கிறது. தனது சுதந்திரத்துக்காக இரத்தம் சிந்துகிறது; பிறாது சுதந்திரத்தை நசுக்க தனது ஆயுதபலத்தைப் பிரயோகிக்கிறது. தனது தேசிய இனத்தை எல்லா தேசிய இனங்களையும் விட உயர்வாகக் கருதுகிறது; பிற தேசிய இனங்களை அவமிதிக்கிறது; நசுக்குகிறது."

"சரி, புலிகளை முதலாளித்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியவாதிகள் என்று சொல்கிறாய். அதுதானே?"

"உனக்குப் புரிந்தால் சரி"

"அப்போ முதலாளித்துவத்தை ஆதரிப்பதும் புலிகளை ஆதரிப்பதும் ஒன்றாகிவிடாதா?"

" இல்லை. முதலாளித்துவ தேசியவாதத்திற்கும் முற்போக்கு பாத்திரம் உண்டு என்பதால் அதன் முற்போக்கு அல்லது சரியான பக்கத்தை ஆதரிப்போம். அதேவேளை அதன் தவறான பக்கங்களை எதிர்ப்போம்.... விமர்சிப்போம்"

"சரி, இப்ப விளங்குது.... அப்ப புலியளை நாம் அம்பலப்படுத்துவது தேசவிடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் என்று நாம் யோசிக்கத் தேவையில்லை."

"அம்பலப் படுத்துவதும் விமர்சிப்பதும் எது என்பதைப் பொறுத்தது. சரியானவற்றை ஆதரிக்கவும் பிழையானவற்றை விமர்சிக்கவும் நாம் தயாராக இருக்கவேண்டும். சரியானதையும் ஆதரிக்காதபோது நாம் விமர்சிக்கும் அருகதையை இழந்து விடுவோம்."

"ஆனால் அவர்கள்பற்றிச் சொல்லப்படுகின்ற போதைவஸ்து கடத்தல், இஸ்ரேல் பயிற்சி குற்றச்சாட்டுக்கள் எல்லாம் அவர்களை முற்றாக நிராகரிக்கும் நிலைக்குத் தானே தள்ளுகிறது."

"இது அவர்களது வர்க்க சார்பு காரணமான செயல்பாடுகள். அவர்களது வர்க்க இயல்புகளை நாம் தீர்மானிக்க முடியாது. அது இந்த இரண்டையும் செய்யத்தான் செய்யும். நாம் ஆதரிப்பது எதை, எதிர்ப்பது எதை என்பதையிட்டு நாம் தீர்மானித்துச் செயல்பட்டால் சரி."

நான் கொஞ்சநேரம் பேசாமல் இருந்தேன். இப்போது புலிகளின் பேச்சுவார்த்தை, சந்தர்ப்பவாதம், அரசியல் முன்முயற்சியின்மை அனைத்திற்கும் காரணம் தெளிவாவது போலப்பட்டது. இப்போது நடந்த போர்நிறுத்த முறிவினை எப்படி விளங்கிக் கொள்வது?

"போர்நிறுத்தம் முறிந்ததைப்பற்றி என்ன நினைக்கிறாய்?", என்று கேட்டேன்.

"அது எதிர்பார்த்ததுதானே. புலிகள் அவசரப்பட்டு யுத்தத்தைத் தொடங்கியதால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் இருந்து மீள, அரசை அரசியல் ரீதியாக தற்காப்பு நிலைக்குத் தள்ள முயன்றிருக்கிறார்கள். ஆனால் அரசு அதைத்தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்றிருக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளையும் கூட்டிப் பேசி தீர்மானம் எடுத்ததன்மூலம் யுத்தநிறுத்த முடிவுக்குத் தான் பொறுப்பில்லை எனக்காட்டியுள்ளது. அரசைத் தனிமைப்படுத்த புலிகள் நினைத்தால் அது புலிகளைத் தனிமைப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளது. புலிகளைத் தனிமைப்படுத்துவதன் மூலம் தமிழ்மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைத்துவிடவும் அரசு தீவிரமாக இயங்குகிறது. கூடநிற்கும் பிற தமிழ்க்கட்சிகளோ இதைப்பற்றி எண்ணமற்று புலி விழுந்தால் போதுமென்று திரும்பத் திரும்பத் துரோகமிழைக்கின்றன."

"இராணுவ ரீதியில் அரசு பலமாகவும் புலிகள் பலவீனமாகவும் இருப்பதால்தான் இந்தநிலை என்று நான் நினைத்தேன்."

"இல்லை. இராணுவ ரீதியிலான சம்பவம் முக்கியமில்லை. அரசியல் ரீதியான பலம்தான் முக்கியம். ஒருபோதும் அரசின் பலத்துக்கு சமமான இராணுவபலத்தை புலிகள் பெறமுடியாது. ஆனால் அது தேவையில்லை. அது இல்லாமலே அரசை நிலைகுலையச் செய்யவும் விரட்டவும் முடியும். ஏனென்றால் விடுதலைப்போர் மக்களது உணர்வாலும், தீர்மானத்தாலும் செய்யப்படுவது; கூலியால் அல்ல. ஆனால் அதைப் புலிகள் இழந்திருக்கிறார்கள்."

"எப்படி?"

"அரசியல் ரீதியாக இன்று தாக்குதல் நிலையில் இருப்பது அரசே. அது முற்றாக அம்பலப்படுத்தப் படவேண்டும்.

*(தொடர்ச்சி 19 ஆம் பக்கம்)*

www.tamilarangam.net



வரதனுக்கு பொம்பிளை ஊரிலிருந்து வந்து விட்டாவாம். தாலிக்கொடி, கூறைச்சீலை எல்லாம் கையுடன் கொண்டு வந்துள்ளாவாம். நாள், நட்சத்திரம் பார்த்து, எந்தக் குறையுமில்லாமல் முறைப்படி திருமணம் செய்யச் சொல்லி இரு பகுதி வீட்டார்களும் அறிவுறுத்தியிருக்கிறார்களாம்.

விஷயத்தைச் சொன்ன வரதனின் கையில் வைத்திருந்த 'சுக்கில வருஷ வாக்கியப் பஞ்சாங்கத்தை' வித்தியார்த்தி வாங்கிப் பார்த்தான். யாழ்ப்பாணம் கொக்குவில் இ. சி. இரகுநாதையரின் சகோதரரின் புத்திரர் இ. வெங்கடேச ஐயரால் கணிக்கப்பெற்றது. 132 ஆம் வருஷப் பதிப்பு என்று முன்அட்டையில் எழுதியிருந்தது.

வித்தியார்த்திக்குப் பஞ்சாங்கத்தில் எல்லாம் நம்பிக்கையில்லை! என்றாலும் இதுவரை ஒரு பஞ்சாங்கத்தையும் முழுதாகப் பார்க்காததால் அவதானமாக ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்தான்.

"பிரயாணத்துக்கு விலக்கப்பட்ட சகுனங்கள்" என்ற தலைப்பில் 1. அம்பட்டன், 2. தட்டான், 3. மொட்டந்தலையர், 4. விதவை, 5. அலி, 6. ஏழை, 7. நோயாளி, 8. மலடன், 9. அடிமை, 10. குருடு, 11. ஊமை, 12. மூக்கறையர், 13. நொண்டி .... என்று எழுதிக் கீழே இவர்கள் எதிர்ப்படின் பிரயாணம் செய்யலாகாது, மீறிப் பிரயாணம்செய்யின் நஷ்டம், துக்கம், சுகக்குறைவு உண்டாகும்! என்று குறிப்பிட்டிருந்ததைப் படித்தபோது வித்தியார்த்திக்குப் பற்றிக்கொண்டு வந்தது. சுக்கில

# வித்தியார்த்தியின் டயறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருஷ வாக்கியப் பஞ்சாங்கத்தை அப்படியே மூடித் திருப்பி கொடுத்துவிட்டான்.

பஞ்சாங்கத்தைப் பார்த்ததில் வித்தியார்த்தி கண்டுகொண்டது 1.சாதிவெறி, 2.பெண்ணடிமை, 3.ஆணாதிக்கம், 4. மனித விரோதம், 5. பணத்திமிர், 6.முட்டாள்தனம் என்பவற்றைத்தான்.

இவ்வளவற்றையும் 132 வருஷங்களாகக் கணித்து இந்துக்களின் முக்கிய சடங்குகளினூடாகத் திணித்து வருகிறார்கள் என்றால், இந்து மதமும், இதன் பூசகர்களும், நாள்- நட்சத்திரம் பார்த்து எல்லாம் செய்ய நினைப்பவர்களும் எப்படி சாதி வெறி, ஆணாதிக்கம், பணத் திமிர் எல்லாவற்றையும் கட்டிக்காத்து முட்டாள்த்தனத்தையும், மனித விரோதத்தையும் செயலாக்கி வருகிறார்கள் என்பதை வித்தியார்த்தியால் புரிந்துகொள்ளமுடிந்தது.

பஞ்சாங்கப் பைத்தியங்கள் ஒரு புது ஊருக்குப் போயிருந்தால் பிரயாணத்துக்கு தங்களால் விலக்கப்பட்ட சகுனங்களான மலடர், நோயாளி, ஊமை போன்றவர்களை எப்படிக் கண்டுபிடிப்பார்கள்? குறுக்கே வருபவர்களை மறித்துக் கேட்பார்களோ? என்ன அறிவீனம்? என்று வித்தியார்த்தி எரிச்சல்பட்டான்.

நாட்டில் 10 வருடங்களுக்கு மேலாகவும் நடைபெற்றுவரும் ஆயுதப் போராட்டங்களினால் 'இப்படியான பஞ்சாங்கங்கள்' எந்தவிதத்திலும் அழிக்கப்படவில்லையென்றால், இவற்றைக் களைவதற்கேற்ற போராட்டங்கள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லையென்பதையும் புரிந்துகொண்ட வித்தியார்த்திக்கு இவற்றை எப்படி இல்லாமற்செய்யலாம் என்பது மட்டும் புரியவில்லை. புதிய கலாச்சாரம் என்கிறார்களே அதுதான் இதற்குத் தீர்வாகுமா? அதுவரை இப்படியான பஞ்சாங்கத் திருமணங்கள், திருவிழாக்கள் போன்ற சடங்குகளில் பங்கு பற்றாமல் பகிஷ்கரிக்கலாமா? இவற்றை வெளிச்சம் போட்டுக்காட்டி நாடகங்கள் போடலாமா வீடு? வீடாகப்போய் பிரச்சாரம் செய்யலாமா? என்று பல வாறு வித்தியார்த்தி யோசித்துகொண்டிருக்கிறான்.

**********************

வித்தியார்த்தி கவனித்துக் கொண்டுதான் வருகிறான்- அரபு எதிர்ப்பு, முஸ்லீம் எதிர்ப்பு, இஸ்லாம் எதிர்ப்பு என்பன திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன என்பதை. ரி.வி., பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி.. எல்லாவற்றிலும் இந்த ஒரே விடயம்தான்.

வளைகுடா யுத்தம் தொடங்கும்போதே வித்தியார்த்தி இப்படி நடக்கலாம் என்று எதிர்பார்த்திருந்தான். எனினும் சவூதி, சிரியா, எகிப்து, துருக்கி...

www.tamilarangam.net

போன்ற அரபு நாடுகள் அமெரிக்காவுக்கும், மேற்கைரோப்பிய நாடுகளுக்கும் தங்கள் உதவியைத் தாராளமாக, காசு வாங்கிக்கொண்டும், வேறு நலன்களுக்காகவும் செய்து வருகையில், அரபு எதிர்ப்பு என்பது மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்குமென்றே வித்தியார்த்தி நினைத்திருந்தான். ஆனால் அமெரிக்காவினதும், மேற்குலக ஏகாதிபத்தியங்களினதும் பிரச்சார வேகங்களைப் பார்க்கும் போது வித்தியார்த்தி தன்னுடைய நிலையை நினைப்பை மாற்றிக்கொள்ளவேண்டியிருந்தது.

யுத்தம் ஆரம்பிப்பதற்குமுதலே சதாம்குசேனை கிட்லர் என்றும், சர்வாதிகாரி என்றும் ஸ்டாலின் என்றும் (?) வர்ணித்து வருகிறார்கள். சின்ன வயதிலிருந்தே சதாம் குசேன் கொடியவரென்றும் வெளியிடப்பட்ட கதைகள் மெல்ல மெல்ல முழு அராபியர்களைப் பற்றியதும், முழு இஸ்லாமியர்களைப் பற்றியதுமான வர்ணனைகளாக மாறிக்கொண்டிருப்பது யுத்தத்தின் சூத்திரதாரிகளையும், அவர்களின் கபட நோக்குங்களையும் வித்தியார்த்திக்குக் காட்டிக்கொண்டது.

இஸ்லாம் மதம் அதிதீவிரமானது, வெறியூட்டக் கூடியதென்றும் இஸ்லாம் மதத்தைக் கேவலப்படுத்தியும், எந்நேரமும் முஸ்லீம் பயங்கரவாதிகளால் பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று பயமுட்டி மேற்கு நாடுகளில் தீவிர பந்தோபஸ்து ஏற்படுத்தியிருப்பது முஸ்லீம்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டியும், வளைகுடாவில் அந்நியப்படைகள் நிலை — கொண்டிருப்பதற்கு எதிராகவும், யுத்தத்திற்கு எதிராகவும் அரபுநாடுகளில் நடக்கும் மக்கள் எழுச்சிகளைக் காட்டி அராபியர்கள் ஐரோப்பாவுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள், தொன்றுதொட்டே அராபியர்களின் நோக்கம் முதலில் ஐரோப்பாவையும், பின் ஏனைய நாடுகளையும் கைப்பற்றி முழு உலகையும் ஆளுவதாகும் என்று... பயங்கர உருவம் கொடுத்துவருவதை வித்தியார்த்தியால் மேற்குலகப் பொதுசனத் தொடர்பு சாதனங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிந்தது.

இவற்றின் விளைவாக ஜேர்மென் பாடசாலைகளில் படிக்கும் அராபிய மாணவர்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும், அராபிய அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் கிடைத்திருப்பதாகவும் அராபியர்களுக்கெதிரான துவேசம் ஊட்டப்படுவதாகவும் வளைகுடா யுத்தத்திற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் கூட்டத்திற்கு போய்விட்டு வந்த மாஸ்ரர் வித்தியார்த்திக்குத் தெரிவித்தார். மாஸ்ரருக்கு சில குழுக்களுடன்தொடர்புண்டு.

(தொடர்ச்சி 58 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாசிஸ்டுகளே! சிந்தனையைச் சிறையிட முடியுமா?

ஈழத்தின் 'கையறு நிலை' கடல் கடந்த மேலை நாடுகளில் பல்வேறு தமிழ் சிறு பத்திரிக்கைகளை இன்று வெளிக் கொணர்ந்துள்ளது. தனி நபர்களாலும் குழுக்களாலும் நடத்தப்படும் தேடல், மனிதம், புதுமை, தூண்டில் போன்ற — ஏறத்தாழ இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இதழ்கள் மேலை நாடுகளிலிருந்து வெளிவருகின்றன. ஈழத்தில் கருத்துச் சுதந்திரத்துக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் இத்தகைய பத்திரிக்கைகளே இன்று பல சரியான கருத்துகளுக்கான விவாத மேடையாக உள்ளன.

கடல் கடந்து பிழைப்பைத் தேடி மேலைநாடுகளுக்குச் சென்ற தொழிலாளிகள், உயர்கல்வி கற்று இந்நாடுகளில் பணியாற்றும் அறிவுஜீவிகள், ஈழ அகதிகள், ஈழ விடுதலை இயக்கங்களில் பங்கேற்று தலைமையின் தவறான போக்கினால் அதிருப்தியடைந்து வெளியேறி, புதிய பாதையைத் தேடுவோராக மேலைநாடுகளுக்குச் சென்ற 'முன்னாள்' போராளிகள், இதர குழுக்களின் தாக்குதலுக்கு அஞ்சி தஞ்சமடைந்தவர்கள்- என பலதரப்பட்ட ஈழத் தமிழர்களால் பல இதழ்கள் வெளியிடப்படுகின்றன. ஈழத்தைப் போல் கருத்துச் சுதந்திர கதவடைப்பு மேலைநாடுகளில் இல்லாததால், ஈழ விடுதலை இயக்கத்தின் தவறுகள், குறைகள், துரோகம், அராஜகம், ஐக்கியம் பற்றி துணிச்சலாகவும் பகிரங்கமாகவும் இப்பத்திரிக்கைகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன.

### மூன்றுவகை போக்குகள்

இப்பத்திரிக்கைகளை குறிப்பாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். தமது சுயதிருப்திக்காகவும், தமது மேதாவித்தனத்தைக் காட்டுவதற்காகவும் நடத்தப்படும் பத்திரிக்கைகள் ஒருவகை. முன்னாள் போராளிகள், ஈழ விடுதலை இயக்கத்தை களத்திலிருந்து வழிகாட்டவோ தலைமை தாங்கவோ முடியாமல் தோல்வி கண்டவர்கள், இன்றுள்ள அனைத்து ஈழப் போராளிக் குழுக்களின் மேல் அவநம்பிக்கையும் அதிருப்தியும் கொண்டவர்களால் இப்பத்திரிக்கைகள் நடத்தப்படுகின்றன. ஈழ விடுதலை இயக்கத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றலோ மாற்றுத் திட்டமோ இல்லாத இவர்கள் தமது தோல்வியை மறைக்க இச்சிறு பத்திரிக்கைகளின் மூலம் தமது அறிவுஜீவித் தனத்தைக் காட்டுகின்றனர்.

ஈழ விடுதலை இயக்கத்தின் இன்றைய போக்கைப் பற்றி சூடேறிய விமர்சனங்கள், 'புதிய இடது' போக்கினை ஆதரித்து மயிர் பிளக்கும் சித்தாந்த, கலை இலக்கியக் கோட்பாட்டுக் கட்டுரைகள் என்று தமது அறிவுஜீவித் தனத்தையும் மேதாவிலாசத்தையும் பறைசாற்றிக் கொள்ள இப்பத்திரிக்கைகளை ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்த பிழைப்புவாத அறிவுஜீவிகள் தான் இப்போது 'புதிய இடது' போக்கையும், தாராளவாத, அமைப்புசாராத, கலைப்புவாதப் போக்கையும் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டு, ஈழ விடுதலை இயக்கத்தை மேலும் குழப்புபவர்களாக உள்ளனர். தமது உணர்வுகளை வெளிப்படுத்த ஆர்வத்துடன் பத்திரிக்கை தொடங்குபவர்கள் இத்தகைய பிழைப்புவாத பழம் பெருச்சாளிகளின் படைப்புகளை அறிந்தோ, அறியாமலோ வெளியிடுவதன் மூலம் மேலை நாட்டிலுள்ள ஈழத் தமிழர்களைக் குழப்புவதோடு, தாமும் குழம்பி திசை தெரியாமல் தத்தளிக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

றார்கள்.

பத்திரிக்கையை வெறும் விவாத மேடையாக்கி பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிடுவது மற்றொரு வகை. பாதிக்கப் பட்ட - பழிவாங்கப்பட்ட போராளிகள், ஆதரவாளர்களால் இத்தகைய இதழ்கள் வெளியிடப்படுகின்றன. பெரும்பாலான ஈழப் போராளி அமைப்புகளின் அராஜகம், சீரழிவு மற்றும் தலைமையின் துரோகத்தால் அதிருப்தியடைந்து விலகி, புதிய மாற்று வழியை முன்வைக்க முடியாமல் எல்லா வகையான கருத்துக்களையும் கலவையாக வெளியிடுகின்றனர். தலைமையின் துரோ கத்தால் விரக்தியடைந்த இவர்கள், எதிர்ம றையாக 'எந்த தலைமையுமே சரியல்ல; தலைமையே கூடாது' என்று சூடுபட்ட பூனைபோல பத்திரிக்கைகளில் வெளியிடு கின்றனர். இப்பத்திரிக்கைகளிலும் முன்னர் குறிப்பிட்ட பிழைப்புவாத அறிவு ஜீவிக ளின் படைப்புகளும் வெளிவருகின்றன.

மேற்கூறிய இரண்டு போக்கினதும் விளைவாக, 'புதிய இடது' போக்கை உணர்வு பூர்வமாக ஆதரிப்பவர்களும் உண்டு. இவர்கள் தம்து சுயதிருப்திக்காக வும், தமது மேதாவிலாசத்தைக் காட்டிக் கொள்ளவும் பத்திரிக்கை நடத்துவதோடு, புதிய இடது' கருத்துக்களையும் படைப்புக ளையும் வெளியிட்டு அதன் மீது விவாதம் நடத்துகின்றனர். கருத்து சுதந்திரம், அமைப் புக் கட்டுப்பாடு கூடாது, 'வைதீக மார்க்சி யம்' என்று மார்க்சியத்தை நிராகரிக்கும் போக்கை அறிந்தே பிரதிநிதித்துவப் படுத்து பவர்கள் இதில் இன்னொரு ரகம்.

இவ்விரு போக்குகளிலிருந்தும் வேறு பட்டு தம்மால் இயன்ற அளவுக்கு சமூக உணர்வோடு செயல்படுபவர்களால் மூன் றாவது வகை பத்திரிக்கைகள் நடத்தப்படு கின்றன. ஈழ விடுதலை இயக்கத்தை முன் னெடுத்துச் செல்ல மாற்றுத் திட்டங்களை இவர்களால் முன்வைக்க இயலாத போதி லும், தாம் வாழும் பகுதியிலுள்ள ஈழத் தமி ழர்களிடம் நிலவும் கலாச்சார சீரழிவுக ளுக்கு எதிராக நின்று, அவர்களை புரட்சிகர உணர்வில் பயிற்றுவிப்பதில் அக்கறையுடன் செயல்படுபவர்கள்.

### தூண்டில்

புலிகளின் அராஜகத்தையும் பாசிசப் போக்கையும் அம்புலப்படுத்தும் அதேவேளையில் எல்லா இயக்கங்களையும் நிராகரிப்பதாக உள்ளது. ஈழ விடுதலை இயக்கம் பற்றி கற்ப னையான தீர்வுகளும் மிகையான எதிர் பார்ப்புகளும் கொண்டதாக அதன் படைப்பு கள் உள்ளன. எடுப்பான கேலிச் சித்திரங்க ளுடன் வடிவமைப்பில் மேம்பட்டதாக இப் பத்திரிக்கை உள்ளது.

### மேலைநாட்டு ஈழத்தமிழர்களின் வாழ்நிலையும் சமூக உணர்வற்ற போக்கும்

மேற்கூறிய இருவகை குட்டி முதலா ளித்துவப் போக்கிற்கு மேலைநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் வாழ்நிலையே வளமான சமூக அடிப்படையாக உள்ளது. **இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளி கள். ஆலைத் தொழிலாளிகளைவிட, மேலைநாட்டவரால் இழிவான தொழிலா கக் கருதப்படும் ஓட்டல் தொழிலாளிகளாக, சாக்கடை - தெரு சுத்தம் செய்பவராக இடு காட்டைச் சுத்தம் செய்பவராக உள்ளவர் களே அதிகம். பிழைக்கப் போன இடத்தில் கூட நிம்மதியாக வாழ முடியாமல் மேலை' நாட்டு வெள்ளை இனவெறிக் கும்பல்களால் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு தமது வாழ்வு சூறையாடப் படுவ தற்கான அபாயம் நிலவிய போதிலும், பாட் டாளி வர்க்க வாழ்க்கை முறையை பலர் வெறுத்து ஒதுக்கிவிட்டு இருக்கிறவரை அனுபவிப்போம் என்கிற மேலைநாட்டு குட்டி முதலாளித்துவக் கலாச்சாரத்தில் மூழ் கிக் கிடக்கிறார்கள்.**

மறுபுறம், பெண்ணடிமைத்தனம், திரு மணத்துக்கு பெருமளவில் வரதட்சிணை - சீதனம் வாங்குவது, சடங்கு - சம்பிரதாயங்க ளைப் பின்பற்றுவது என்கிற நிலப்பிரபுத்

www.tamilarangam.net

துவ கலாச்சாரத்துடன் இசைந்து வாழ்கிறார்கள். அதாவது மேலைநாட்டு குட்டி முதலாளித்துவக் கலாச்சாரமும் கீழை நாட்டு நிலப்பிரபுத்துவக் கலாச்சாரமும் கலந்த ஒரு வீரிய ஒட்டுரக கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறார்கள். ஒப்பீட்டு ரீதியில் வசதியான வாழ்க்கையும், ஈழத்தைப் போலன்றி தொல்லைகளிலிருந்து விடுபட்ட நிலையும் இருந்தபோதிலும் கூட, இவர்கள் சமூக உணர்வும் அக்கறையுமின்றி இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

கடந்த ஆண்டு சுவிஸ் நாட்டிலுள்ள சூரிச்சில் வாழும் ஈழத் தமிழர்கள் சிலர் நடத்திய பொங்கல் விழா இதன் எடுப்பான வெளிப்பாடாக உள்ளது. இந்த விழாவுக்கு ஈழத்திலிருந்து வாழையும் செவ்விளநீர் குலைகளும் "ஏர் லங்கா" விமானத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டது. மேடையில் கிருபானந்த வாரியாரின் பக்திப் பிரசங்கமும், சீர்காழி சிவ.சிதம்பரத்தின் பக்திப் பாடல்களும் காசெட்டுகளில் ஒலித்தன. விறைக்கும் குளிரிலும் நான்குமுழ வேட்டி கட்டி, மேலுடம்போடு ஐயர் வந்து பூசை செய்தார். பட்டு வேட்டியும் புடவையும் அணிந்து ஈழத் தமிழ்க் குடும்பங்கள் விழாவைக் கொண்டாடி வீடியோ படம் எடுத்து குதூகலித்தனர். மிகையான ஆடம்பரத்துடன் நடந்த இந்த விழாவுக்கு ஏறத்தாழ 35,000 பிராங்குகள் விரயமாக்கப்பட்டது.

ஈழ மக்களும் இந்தியாவிலுள்ள அகதிகளும் சொல்லொணா வேதனையிலும் அவலத்திலும் வாழும்போதுதான், மேலை நாட்டிலுள்ள சில ஈழத்தமிழர்கள் கொஞ்சமும் கூச்சமின்றி இவ்வாறு விழாக் கொண்டாடினர். பொங்கல் விழா மட்டுமல்ல; இன்னும் சிலர் தமது குழந்தைகளுக்கு மேல்நாட்டுப் பாணியில் ஆடம்பரமாக பிறந்தநாள் விழா கொண்டாடி வீடியோ படம் எடுப்பது, ஆண்டுதோறும் தமது திருமண நாளை குதூகலமாகக் கொண்டாடி மகிழ்வது என்றுள்ளனர். வேறு சிலர் புதிதாக வரும் தமிழ் சினிமா வீடியோக்கள், சினிமா - மஞ்சள் - மசாலா பத்திரிக்கைகளை வாங்கி ரசித்துக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான தமிழ் சிறு பத்திரிக்கைகள், குறைந்தபட்சம் தாம் வாழும் பகுதியிலுள்ள ஈழத் தமிழர்கள் சிலரிடம் காணப்படும் இத்தகைய சீரழிவுக் கலாச்சாரத்திற்கு எதிராக சமூக உணர்வுடன் போராடக் கூட முன்வராமல் சமரசமாகிப் போகின்றன. இத்தகைய குட்டி முதலாளித்துவ தாராளவாத, சமரசப் போக்குதான் இப் பத்திரிக்கைகளின் சிந்தாந்த கண்ணோட்டமாக வெளிப்படுகிறது.

எந்த ஒரு சிறு பத்திரிக்கையும் அதைச் சார்ந்த குழுவும், ஈழத் தமிழர்களிடம் நிலவும் குட்டி முதலாளித்துவ சீரழிவுகளை எதிர்த்து போராடாமல் முடங்கிக் கிடக்கும் போது மனிதம் குழுவினரின் முன்னுதாரன மிக்க முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்தகைய முன்முயற்சியை லண்டனிலிருந்து வெளிவரும் பனிமலர், ஜெர்மனியிலிருந்து வெளிவரும் தூண்டில் ஆகிய பத்திரிக்கைகளில் கருத்து ரீதியிலாவது காணமுடிகிறது. இருப்பினும் அவர்கள் செயல்பூர்வமாக என்ன செய்தார்கள், செய்கிறார்கள் என்பதைப் பற்றி விபரங்கள் தெரியவில்லை.

இத்தகைய முன்முயற்சியுடைய பத்திரிக்கைகளும் குழுக்களும் முதற்படியாக ஒரு பாட்டாளி வர்க்க அமைப்பை உருவாக்க வேண்டும். சிதறிக் கிடக்கும் மேலைநாட்டு ஈழத் தமிழர்களை ஒருங்கிணைப்பது என்பது கடினமான பணி என்றாலும் இத்தகைய புரட்சிகர அமைப்பின் மூலம் மட்டுமே மேலைநாட்டு ஈழத்தமிழர்கள் மத்தியில் நிலவும் கலாச்சார சீரழிவுகளுக்கு எதிராகவும், திசைமாறி இழுக்க முயற்சிக்கும் 'புதிய இடது' போக்கிற்கு எதிராகவும் சிந்தாந்த ரீதியிலும் செயல் ரீதியிலும் போராட முடியும். ஈழ விடுதலை இயக்கத்துடனும் பிறநாட்டுப் புரட்சிகர இயக்கங்களுடனும் தம்மை நெருக்கமாகப் பிணைத்துக் கொள்ளும் இத்தகையதோர் அமைப்பு மட்டுமே

(தொடர்ச்சி 58 ஆம் பக்கம்)

www.tamilarangam.net

# முரண்பாடு சம்பந்தமாக முரண்பாடு.

தூண்டிலின் போக்குப்பற்றிய விமர்சன—விவாதத் தொடரில், சக—ஓடிகளால் 34 ஆவது கலத்தில் தொடக்கப்பட்டு, 37 ஆவது கலம் வரையில் பல விமர்சனங்கள் எழுந்துவிட்டன.

மண்ணிலிருந்து போராடும் மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக்க வெளிநாட்டு சஞ்சிகைகளால் இயலாதுதான். சக—ஓடிகளது விமர்சனத்தில் உடன்பாடு கொள்ளத் தயங்க வேண்டிய மிகவும் சொற்ப விடயங்களை ஐரோப்பியச் சூழ்நிலைக—ளைப் புரிந்துகொள்ளாத விமர்சனம் என ஒதுக்குவதை விட அவர்களின் சூழ்நிலையில் ஆரோக்கியமாக எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை விளங்கிகொள்வது சாலச் சிறந்தது. அதற்கு பின்னரான அனைத்து விமர்சனங்களிற்கும் தோழர் சிவசேகரத்தின் கருத்துகள் தெளிவான நிலையை அல்லது ஆரோக்கியமான விவாதத்திற்குரிய அத்திவாரத்தைக் கொடுத்து நிற்கின்றன. இவ்வத்திவாரத்தினின்று அவர் எழுப்பியுள்ள கேள்விகளை தேடலில் நகர்த்துவது இன்றைய அனைத்துப் போராளிகளினதும் கடமையாகும்.

தோழர் சிவசேகரம் இங்குள்ள சூழ்நிலைகளையும் பத்திரிகைகளின் உருவாக்கம், அதன் தாக்கம் குறித்தும் மிகவும் தெளிவாக கலம் 35இல் விளக்கியிருந்தார்.

தோழர் வே. கண்ணனின் கருத்துகளுடனும் (தூய்மைவாதமாக அவர் எதைக் கொள்கிறார் என்பதைத் தவிர) உடன்பாடு கொள்ளத்தக்கதாகவிருந்தது.

மேலும் 'முரண்பாடுகளை பாவித்தல்' பற்றி சிவசேகரம் சுட்டிக்காட்டிய பகுதியை தோழர் எஸ். பி. தாசன் 'புலிகளை தேசிய சக்திகளாக அங்கீகரித்தல்' என்ற இன்றைய சில இடதுசாரி சார்ந்த சக்திகளின் கருத்துகளுடன் இணைத்துப் பார்த்திருந்தார்.

தோழர்கள் சிவசேகரம் குறிப்பிட்ட விடயத்திற்கும், எஸ். பி. தாஸன் பொருத்திய விடயத்திற்கும் பாரிய இடைவெளியிருந்தாலும் எஸ். பி. தாஸன் சொல்லவந்த விடயம் மிகவும் கவனத்திலெடுத்துக்கொள்ளப்பட வேண்டியவைதான்.

மேலும் புலிகளைத் தேசியசக்திகளாக அங்கீகரிப்பவர்களுக்குத் தோழர் சுகன் நன்றே சாட்டையும் கொடுத்திருந்தது நிலைமைகளை நன்கு விளக்கியது.

முரண்பாடுகளைத் தெளிவாக இனம்கண்டு அவற்றைப் பயன்படுத்தாமல் முரண்பாடுகளை முடிவுக்குக்கொண்டுவர முடியாது. அனைத்து முரண்பாடுகளும் வர்க்க முரண்பாடுகளேயாயினும் அவற்றை வளர்த்துக் கூர்மைப்படுத்தும் இரு பெரிய முகாம்களுக்குள்ளும் அடக்காமல் வர்க்கப் போராட்டத்தைச் செய்ய முடியாது. இந்த முரண்பாடுகளை வளர்க்கின்றபோது வர்க்க அமைப்புகளையும் உரமாகச் சேர்த்து வளர்க்கவேண்டும். இதை வர்க்கச் சிந்தனையாளர்கள்தான் ஊக்கமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென சமூகம் நிர்ப்பந்தித்திருக்கிறது.

'இலங்கையில் யு.என்.பி – எஸ்.எல்.எப்.பி. முதலாளித்துவங்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளைப் பாவிப்பதாக கூறிக்கொண்ட சி.பி(ரஷ்ய – சீன), எல்.எஸ்.எஸ்.பி. கட்சிகள் பேரினவாதத்திற்கு சோடை போயின' என எஸ்.பி. தாஸன் குறிப்பிட்டுள்ளார்.

இது உண்மைதான். ஆயினும் இந்நிலைமைகளிலிருந்து முரண்பாடுகளைப் பாவித்தல் பிழையானது என்ற முடிவுக்கு வரலாகாது.

யு.என்.பி., எஸ்.எல். எப்.பி. முரண்பாடுகளைப் பயன்படுத்தவேண்டிய தேவை, தேசிய முதலாளித்துவ பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியம் இன்னும் அதிகமாக உள்ளதென்பதை நாம் உணரவேண்டும்.

இலங்கையில் நடந்த இப்பயன்படுத்தல் விடயத்தில் தவறு எங்கேயிருக்கிறதென்றால் பெரும்பான்மை இடதுசாரிகள் கதிரைப் புரட்சியாளர்களாக இருந்தமைதான். இரு கட்சிகளுக்குள்ளும் பெரிய இடைவெளியையும், தேசிய பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதிலும் மேல் கட்சி மட்டத்தில் கவனம் செலுத்தியளவிற்கு மக்களிடத்தில், தொழிலாளர்களைக் குறிப்பாக விவசாயிகளை அமைப்பாக்குவதில் கவனம் செலுத்தப்படவில்லை.

மலையகத் தொழிலாளர்களை இடதுசாரிகளின் அணியுள் கொண்டுவருவதற்குரிய எல்லா முயற்சிகளுமே இதுவரை பலனற்றுப்போயின. இவைபற்றி இடதுசாரிகளிடம் தெளிவான தந்திரோபாயம் இருக்கவில்லை. 70 – 77 காலப் பகுதியில் இடதுசாரிகள் தொழிலாள, விவசாயிகளிடையே நிரம்ப வேலைசெய்யவேண்டியிருந்தது. இதை அவர்கள் செய்யத் தவறினர்.

இத் தவறு ஏன் நிகழ்ந்தது? தலைமை கொடுத்த சக்திகள், முரண்பாடுகளைப் பயன்படுத்தும் தந்திரோபாயத்தை வகுத்த சக்திகள் தமது தலை

www.tamilarangam.net

மைக்குள் முழுப் பாட்டாளிவர்க்கத்தையும் கொண்டுவர முடியாமற் போவதற்குரிய காரணங்கள் என்ன? என்பவற்றை அக்காலகட்டத்தில் அனுபவபூர்வமாகத் தரிசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்த தோழர் சிவசேகரம் போன்றவர்கள் இன்றைய இளையதலைமுறையினருக்கு விளக்க வேண்டும்.

சரியான கருத்துகளை மக்கள் பற்றிக்கொள்ளும் வண்ணம் அவை அமைப்பாக்கப்பட வேண்டும். அந்தக் கருத்திற்குரிய சக்திகளை ஒன்றுதிரட்ட வேண்டும். அந்த ஒன்று திரண்ட சக்திகள் அக் கருத்தை நகர்த்தாதுவிடில் நாம் அதன் விளைவை எதிர்பார்க்க முடியாது. அதற்காக அந்தக் கருத்து பிழையாகி விடவும் முடியாது.

குறிப்பாக இனமுரண்பாடு சம்பந்தமாக நம் இடதுசாரிக் கட்சிகள் வைத்த கருத்தில் அடிப்படையில் நாம் அதிகம் முரண்பாடு கொள்ள முடியாது. ஆனால் அதை நடைமுறை படுத்திக்கொள்ளும் வகையில் அவர்களிடம் பலமான அமைப்பிருக்கவில்லை. ஆனால் தான்தோன்றித்தனமான கருத்துகளுக்கு பலமான அமைப்பிருந்தமையால் அவை எளிதில் ஆதிக்கம் செலுத்துமளவிற்கு வளர்ச்சியுற்றன.

எல்லா விமர்சனங்களிலும் (சிறுபிள்ளைத்தனமாக அல்லது புலித்தனமாக - இது பாசிசம் என்று சொல்வதற்குக்கூட திட்டமிருக்கவேண்டும், கையிலே ஏ. கே 47 இருக்கவேண்டும் என்று கூறும் தோழர் பி. றயாகரனின் விமர்சனம் உட்பட) ஒரு பொதுவான தன்மை தூண்டிலின் - போக்கு பிழையானதல்ல, அது இன்னும் ஆரோக்கியமான தேடலை நோக்கி நகர வேண்டும் என்பதுதான்.

சில ஆரோக்கியமான விமர்சனங்களையும், சில பாசிசவிசிறிகளின் பிரச்சாரங்களையும் விட்டு மற்றும் சில விமர்சனங்கள் தூண்டிலை ஒரு அரசியல்கட்சியாக அல்லது இயக்கமாகக் காணும் போக்குத் தென்படுகிறது. இது ஒரு வகை இயக்க மிச்ச சொச்சங்களிலிருந்து விடுபடாத நிலைதான். இவர்கள் இந்த நிலையைவிட்டு தம்மை மாற்றிக்கொண்டு வே. கண்ணன் சொல்வதுபோல் தூண்டிலைச் சரியாக இனங்காணவேண்டும்.

ஒட்டுமொத்தமாக இவ் விமர்சனத் தேடல்களிலிருந்தும், மற்றும் பிரஜைகளது 'தேசத்தின் குறிப்புகள்', மனிதம் குழுவினரின் 'ஐக்கிய இலங்கை சாத்தியமா?' போன்ற அனைத்து தொடர்களிலிருந்தும் இரு போக்குகள் சில இடத்தில் தெளிவாகவும், சில இடங்களில் மருண்டும் தெரிகின்றன.

அவை:

1. இலங்கைக்கான வர்க்கப் போராட்டத்தினூடாக விடுதலையைக் காண்பது.
2. தமிழீழத்திற்கான போராட்டம்.

www.tamilarangam.net

இங்கே நான் அடிக்கடி குழம்பிப்போவது 'எமதுதேசம்' 'எமது மக்கள்' எனும் போது தான். இவர்கள் எதை, யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிவதில்லை.

ஆகையால் இத் தேடல்களில் ஈடுபடும் போராளிகள் தமது விமர்சனங்கள், விவாதங்களில் இதைத் தெளிவாக எழுதுவது என் போன்ற பாமரர்களுக்கும் விளங்க உதவும்.

மனிதம் குழு தெளிவாகத் தமது கருத்தை முன்வைத்ததைப் போன்று அனைத்துப் போராளிகளும் இத் தேடலில் தமது பார்வையை முன்வைப்பதும், தோழர் சிவசேகரம் இறுதியில் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு விடை காண முயல்வதும் தவிர்க்க முடியாதது.

● சாரங்கன்

---

(54 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஈழத்திலுள்ள புரட்சிகர ஜனநாயக சக்திகளை ஐக்கியப்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமான மாற்றுத் திட்டத்தை முன்வைத்து ஈழ விடுதலைக்கான தமது பங்களிப்பைச் செய்ய முடியும். இதற்கான காலம் கனியவில்லை என்று தள்ளிப் போடுவதைவிட இப்போதிருந்தே அதற்கான முயற்சியில் இறங்குவதுதான் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு புதிய நம்பிக்கையூட்டும் திருப்புமுனையாக அமையும்.**

● **மனோகரன்.**

(51 ஆம் பக்கத் தொடர்ச்சி)

. கூடவே ஜேர்மனியின் பல பாகங்களில் புதிய நாஸிகள் சதாம் குசேனுக்கு ஆதரவு தெரிவித்து ஈடுபட்ட நடவடிக்கைகளைக் காட்டியும் இந்த எதிர்ப்பு வளர்க்கப்படுகிறதாம் என்று மாஸ்ரர் கூறினார்.

சதாம் குசேன் ஈவிரக்கமற்ற கொலையாளி என்பதில் வித்தியார்த்திக்கு மறு கருத்தில்லை. ஆனால் இதே போன்ற தகைமையுடைய ஏனைய நாட்டு தலைவர்கள் ஈராக்கை எதிர்ப்பதற்கு எந்தத் தகுதியுமற்றவர்கள் என்பதுதான் வித்தியார்த்தியின் வாதம்.


அதேநேரம் சில முஸ்லீம்கள் காட்டிக் கொடுத்தார்கள் என்பதற்காக பள்ளிவாசல்களுக்குள் போய் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்களைப் படுகொலை செய்ததும், வடக்கிலிருந்து முழு முஸ்லீம்களையும் விரட்டியதுமான புலிகளின் செயலைப் போலவே சதாம் குசேனின் நடவடிக்கைகளுக்காக முழு இஸ்லாமியர்களையும் பயங்கரவாதிகளாகக் காட்டுவது முட்டாள்த்தனமானதும், பயங்கரவாதமானதுமாகும் என்பதே வித்தியார்த்தியின் அடுத்த வாதம்.



தொகுப்பு-

இரா. செல்வத்துரை

இரா. ரஜீன்குமார்




தொலைந்து போயின !
தொலைந்து போயின ! !
இந்த நூற்றாண்டில் ,
மனித அடையாள
ஆவணமனைத்தும்
ஒரு சில பிரஜைகள் உணர்வுகள் மாத்திரம்
எச்சமாய் இருக்க ;
ஏனைய அனைத்தும் . . .
மீண்டும் ஒருதரம் தொலைந்தே போயின ! ! !
தொலைத்தவர் நாங்களே.


"ஸ்ரீ ராம ஜெயம். . .
பரமண்டலத்தில் இருக்கும்
எங்கள் பிதாவே . . .
அல். . . லாவோ . . அக்பர். . .
அமைதியைத் தாரும்"
கண்களை மூடி,
இரு கை கூப்பி,
வானைத் தொழுகையில்
பைபிளும், குர்ரானும், புராண, இதிகாசங்களும்
கூறாகிப் போனவர் குருதியில் தோய்ந்து
விமானங்களாகக். . . குண்டுகளாக. . .
"இதுவே அமைதிப் புறா" என
ஆள்பவர் செய்யும்
செப்படி வித்தையில்
மேலும் கூறாகி. . . கூறுகள் கூறாகி. . .
தொலைந்தே போயின.
தொலைத்தவர் நாங்களே.

www.tamilarangam.net

கண்களை மூடி,
இரு கை கூப்பி,
பூமியை மறந்து,
வானைத் தொழுபவர்
செவி திற; செவி திற;
செய்தி ஒன்றுண்டு.
நிதானமாய் செவி திற.

தாங்கள் செய்த
விளக்குகள் விற்க
சூரியனைத் தொலைத்துக்கட்டுவதில்
காத்தான்குடியிலோ (*
இந்திய நாட்டிலோ (**
பாலை மண்ணிலோ (***
புதையும் பனியிலோ (****

பூமிப் பந்தின் எந்தப் பரப்பிலும்
மாறி மாறி
ஆள்பவர் அனைவரும்
ஒற்றுமையாய் இருப்பர்.
செவி திற! நிதானமாய் ...
செவி திற !!



* – இலங்கையில் பயங்கரவாதிகளினால் முஸ்லீம்கள் படுகொலை.

** – இராமனின் பெயரால் படுகொலை.

*** – அல்லாவின் பெயரால் (புனிதப்) படுகொலை.

**** – இயேசுவின் பெயரால் (அமைதிப்) படுகொலை.

www.tamilarangam.net

# யுத்தமும் மக்களும்.

இன்று முழு உலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளது வளைகுடாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தமே. உலகநாடுகள் அனைத்தினதும் பொதுசனத்தொடர்புச் சாதனங்கள் யாவும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஈராக் நாடுகளின் தணிக்கைக்குட்பட்டு வரும் யுத்தக் காட்சிகளாலேயே தம்மை நிரப்பிக் கொள்கின்றன. எல்லா நாட்டு உட்பிரச்சினைகளும் திடீரென்று காணாமற் போய் வளைகுடாவில் நடைபெறும் யுத்தம் மட்டுமே தற்போதைய பிரச்சினை என்பதான உணர்வே பரவலாக உள்ளது.

மூலதனங்களுக்காக நடைபெறும் இந்த யுத்தத்தில் நேரடியாக ஈராக்கில் இலட்சக்கணக்கான மக்கள் கொன்றுகுவிக்கப்பட்டுள்ளார்கள். பல ஆயிரக்கணக்கானவர்கள் உயிராபத்தான காயமடைந்துள்ளார்கள். ஏற்கெனவே ஐ.நா.சபையால் மனிதாபிமானமற்ற முறையில் விதிக்கப்பட்ட உணவு, மருத்துவ, பொருளாதாரத் தடைகளினால் பட்டினியாலும், நோயினாலும் இறந்த ஈராக்கிய மக்கள் இப்போது ஏகாதிபத்தியங்களின் குண்டுகளுக்குப் பலியாகி வருகிறார்கள். எண்ணெய் வயல்களுள்ள நாட்டிலிருக்கும் இம்மக்களே இன்று எண்ணெய்க்காகப் பிற நாடுகளிடம் கையேந்தும் பரிதாபம் உருவாகியுள்ளது.

இது தவிர ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலினால் — இஸ்ரேல், சவூதி ஆகிய நாடுகளில் மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

பயங்கர ஆயுதங்கள் அப்பாவி மக்களைப் பலியெடுப்பதன் மூலம் பரிசோதிக்கப்படுகின்றன. எந்நேரமும் நச்சு, இரசா


தூண்டில்

பெப்ரவரி 1991

இதழ் : 38

ஆசிரியர் குழு ........... கடலோடிகள்

முகவரி ........... THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
F.R.Germany

தொலைபேசி ........... (0231)136633
(புதன் கிழமைகளில் 14-20மணிவரை)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யன, அணுகுண்டு ஆயுதங்கள் பாவிக்கப்படலாமென ஈராக்கும், அதன் எதிர்ப்புக் கூட்டணி நாடுகளும் மிரட்டி வருகின்றன. இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் ஏற்படப்போகும் விளைவுகளைப் பயத்துடன் உலக நாடுகள் எதிர்நோக்கியிருக்கின்றன.

வளைகுடாவில் கடலில் எண்ணெய் கலந்துவிடப்படுவதாலும், எண்ணெய் குதங்கள் எரிந்து கொண்டிருப்பதாலும் சூழலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இவை மட்டும்தான் போரின் விளைவுகளா? இல்லை! யுத்தங்கள் சகல வழிகளினாலும் மக்களைத் தாக்குகின்றன. வளைகுடாவில் யுத்தம் ஆரம்பிக்கப்போவதான சூழ்நிலைகள் இருந்த போதே மூன்றாம் உலகநாடுகளில் பாதிப்புகள் தெரிய ஆரம்பித்துவிட்டன. எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துக்கொண்டே போகும் அதேநேரம் இந்த விலையேற்றத்தைக் காரணமாகக் காட்டி உணவுப் பொருட்களினதும், ஏனைய பொருட்களினதும் விலைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

இந்தப் பொருளாதாரச் சுமையால் நசுக்கப்படுபவர்கள் வழக்கம்போல் சாதாரண, வறிய மக்களே. ஏற்கெனவே அரைப் பட்டினி, கால் பட்டினியாக இருந்த இந்த மக்கள் இப்போது முழுப்பட்டினி கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். சுரண்டல், ஆதிக்க வெறியில் சண்டை பிடிக்கும் நாடுகளின் தலைவர்களை இது எந்தவிதத்திலும் பாதிக்கப்போவதில்லை. தங்கள் நலன்களுக்கு ஏற்ப அவர்கள் சண்டை பிடித்துக்கொள்வார்கள். பிறகு கட்டிப் பிடித்துக்கொள்வார்கள். மொத்தத்தில் இப்படியான யுத்தங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் கொல்லப்படுவது அப்பாவி மக்களே.

இது தவிர மூன்றாம் உலகநாடுகள் இந்த யுத்தத்திற்கு பின் இன்னொரு நெருக்கடியையும் சந்திக்க இருக்கின்றன. இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்திற்கு தாங்கள் வாரி இறைத்


சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக சந்தா !

| | | | |
|---|---|---|---|
| மேற்கு ஜேர்மெனி | 6 | மாதங்கள் : | 20,-டி.எம் |
| | 1 | வருடம் : | 38,-டி.எம் |
| ஐரோப்பிய நாடுகள் | 6 | மாதங்கள் : | 25,-டி.எம் |
| | 1 | வருடம் : | 48,-டி.எம் |
| அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் | 1 | வருடம் : | 65,-டி.எம் |
| அவுஸ்திரேலியா | 1 | வருடம் : | 75,-டி.எம் |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான டொலர்களை அமெரிக்கா பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மெனி, ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய நாடுகள் தங்களுடைய நாட்டு மக்களிடமிருந்தும், மூன்றாம் உலகநாடுகளிலிருந்துமே ஈட்டி இழந்ததைத் திரும்பப் பெற்றுக் கொள்ளப்போகிறார்கள். வரி என்ற பெயரில் இந்த நாடுகளின் மக்களிடமும், கடன் உதவி, ஏற்றுமதி- இறக்குமதி வியாபாரம் என்ற பெயர்களில் மூன்றாம் உலக நாடுகளிடமும் இந்த யுத்தச் சுரண்டல் நடைபெறப்போகிறது.

வளைகுடா உட்பட முழு உலக நாடுகளையும் பாதித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், குவைத்திலிருந்து ஈராக்கும் வளைகுடாவிலிருந்து ஏகாதிபத்திய நாடுகளும் வெளியேற வேண்டும், பலஸ்தீனியர்களினதும், குர்திஷ்தானியர்களினதும் கேள்விகளுக்குப் பதில் வேண்டும்... என்று உலகெங்கிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்த எதிர்ப்பு மக்கள் நடவடிக்கைகளில் எழுப்பப்படும் கோரிக்கைகள் சரியானவையே என்பதில் அபிப்பிராயபேதமிருக்க முடியாது.

*

உலக நாடுகள் அனைத்தினதும் கவனம் வளைகுடாவில் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை இனவெறி அரசு தனது இன அழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஒரு வாரத்தில் மட்டும் கிழக்கு மாகாணத்தில் 200க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் வடக்கில் வல்வெட்டித்துறை தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், உணவுப் பொருட்களின் விலையேற்றத்தாலும், தட்டுப்பாட்டாலும் மக்களைப் பட்டினி போட்டும், இராணுவ நடவடிக்கைகள் மூலமும் கொன்றுவரும் இலங்கை அரசை அம்பலப்படுத்தி வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வளைகுடா யுத்தத்தினால் அமுங்கிப்போய்விடக் கூடாது. இன்னும் முனைப்பாக இவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

---

தபாற்கணக்கு இல. 3o8o7468
Postscheckamt Dortmund
BLZ 44o1oo46

உங்கள் நிதியை அனுப்பி வைத்ததும் ...தம் மூலம் எமக்கு அறிவிப்பதனூல் சஞ்சிகையை அனுப்பி வைப்ப ...தரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
...ி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

பல்வேறு நிர்பந்தங்களால் தமது தாயகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, விரட்டப்பட்டு மேலைநாடுகளில் குடியேறியுள்ள ஈழத்தமிழர்களில் சிலர் தமது மனவெழுச்சிகளையும், எண்ணங்களை பல சிறு பத்திரிகைகளாக வெளிப்படுத்தினர். அவை விழலுக்கு இறைத்த நீராகி விடக்கூடாது; ஈழ - இலங்கை விடுதலைக்கு உரமாக வேண்டும்.